Registered as a News Paper in Ceylon

விலை: சதம் 15

போன்: 7199

பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

கல்ஸியம் காபைட்
சொந்தப் பாவனையாளர்க்கு மட்டும்
இரு. ரூ. 1-50 சதத்திற்கு கிடைக்கும்.
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 மாசி 23 முஹறம் 9 (7—3—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 26

# கொழும்பில் அமெரிக்கத் தூதரகம்மீது தாக்குதல்

## கார்கள் தீக்கிரை எட்டுப் பேர் கைது

கொழும்பு, ஞாயிறு அமெரிக்கத் தூதரகம் நேற்று ஆர்ப்பாட்டக் கோஷ்டியொன்றினால் படுமோசமாகத் தாக்கப்பட்டது. தூதரகத்துக்குச்சொந்தமான இரு கார்கள் நீககிரையாக்கப்பட்டன.

நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக் கோஷ்டி யொன்று அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடாத்தியது. தூதரகத்துக்கு கைக்குண்டுகள் வீசினுர்கள். தூதரக மதிற் சுவரைத்தாண்டிச் சென்ற சிலர் கார்களுக்கு தீவைத்தனர். இருகார்கள் நீக்கிரையாகின. மற்றும் ஐந்து கார்கள் சேதத்துக்குள்ளாகின.

தூதரகம் பலத்த சேதத்துக்குள்ளானது. அங்கு வந்த பொலிஸார் மீதும் ஆர்ப்பாட்டக்காரர் கள் கற்களை வீசினுர்கள். ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் காயத்துக்குள்ளானுர். இந்தப்பொலிஸ் கான்ஸ்டபிளை நோக்கிச்சென்றமற்றொரு பொலிஸ் இன்ஸ்பெக்டரை ஆர்ப்பாட்டக்காரரில் ஒருவர் கிறிஸ் கத்தியால் குத்தினர். இவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க தூதரகம் இப்போது பலத்த பொலிஸ் பாதுகாப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரரில் எட்டுப்பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

லாவோசில் அமெரிக்கர் தலையீட்டை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கத் தூதுவர் ரோபேட் ஸ்டவுஸ் இப்பொழுது வாஷிங்டனில் இருக்கின்றுர். தூதரகப்

(7-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
03 Y 0449 ரூபா 96 120

இரண்டாவது பரிசு
06 X 0102 ரூபா 38,448

மூன்றாவது பரிசு
03 M 0585 ரூபா 9,612

480 ரூபா 60 சதம் பெறுமதியான 100 ஆறுதல் பரிசுகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 35 F 0769 | 34 J 0751 | 10 B 0021 | 05 V 0138 |
| 17 P 0570 | 33 C 0433 | 23 G 0485 | 01 D 0346 |
| 11 F 0244 | 35 R 0171 | 06 P 0232 | 28 D 0732 |
| 09 O 0946 | 17 F 0495 | 27 R 0983 | 21 A 0188 |
| 08 P 0853 | 18 R 0206 | 14 O 0253 | 05 X 0875 |
| | | 09 V 0791 | 39 J 0946 |
| | | 03 Q 0523 | 11 C 0001 |
| | | 37 Y 0229 | 20 N 0824 |
| | | 05 M 0678 | 21 O 0571 |
| | | 20 W 0224 | 32 G 0013 |
| | | 33 O 0199 | 20 P 0861 |
| | | 35 J 0921 | 17 L 0478 |
| | | 12 W 0269 | 11 D 0377 |
| | | 30 M 0215 | 31 A 0400 |
| | | 12 W 0502 | 30 V 0063 |
| | | 03 Q 0934 | 31 J 0770 |
| | | 16 J 0731 | 22 J 0258 |
| | | 20 K 0749 | 38 N 0691 |

(8ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

# குறுக்கு விசாரணையின் போது சாட்சி மயங்கி விழுந்தார்

யாழ்ப்பாணம், ஞாயிறு வவனியா கொலைமுயற்சி வழக்கில் எதிரிசார்பில் ஆஜரான அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் குறுக்குவிசாரணை செய்கையில் 27 வயதான முத்துலட்சுமிசாட்சிக் கூண்டில் மயங்கிவிழுந்தார் சுமார் 40 நிமிடங்கள் அவர் மயக்கம் தெளியாமலிருந்தார். இதனுல்விசாரணையை நீதியரசர் இன்று காலைவரை ஒத்திவைத்தார்.

வடபகுதி அசைஸ் கோர்ஷ்டில் நீதியரசர் ஜி. ஜி. வீரமந்திரி முன்னிலையில்இவ்வழக்கு விசாரணை நேற்று ஆரம்பமானது முத்துலட்சுமி சாட்சியமளித்தபின் அவரை எதிரியின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணசெய்தார்.

இடைவேளைக்குப்பின் மீண்டும் விசாரணை ஆரம்பமானபோது எதிரியின் வழக்கறிஞர் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார் அப்போது சாட்சி மயக்கமடையவே நீதியரசர் விசாரணையை 10 நிமிடம்வரை ஒத்திவைத்தார். உடனடியாக யாழ் பெரியஆஸ்பத்திரிக்கு போன்செய்யப்பட்டு டாக்டர் வரவழைக்கப்பட்டார் டாக்டர் முத்துலட்சுமியை பரிசோதனை செய்தார். முத்துலட்சுமி அதன்பின்பும் தொடர்ந்து மயக்கமடைந்த நிலையில் படுத்திருந்தார் இதைத்தொடர்ந்து நீதியரசர் விசாரணையைஇன்று காலைவரை ஒத்திவைத்தார்.

## தமிழரசார் பிரதமரைச் சந்தித்தனர்

கொழும்பு, சனி பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை இன்று மாலை தமிழரசுக் கட்சித் தலைவர்கள சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தை அந்நியோன்யமாகவும் சிநேகபூர்வமாகவும் நடைபெற்றதாகவும், நீதிமன்றங்களிலும், பொது நிர்வாகங்களிலும் தமிழ் மொழி உபயோகம் பற்றியே தாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார். தமிழரசுத் தூதுக் குழுவினர் பிரதமரைச் சந்தித்தபொழுது பிரதமருடன் அரசியல் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வாவும் கூட இருந்தார்.

தமிழரசுக் கட்சித் தூதுக்குழுவில் திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம் எம். பி., சி. எக்ஸ். மார்ட்டின் எம். பி., செனட்டர் எம். திருச்செல்வம், அ. அமிர்தலிங்கம், எஸ். எம். இராசமாணிக்கம், செல்லத்தம்பு எம். பி. ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இன்று மாலை பிரதமரைச் சந்திக்கவிருந்த தமிழ்க் காங்கிரஸ் எம். பி.க்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பிரதமரைச் சந்திக்கவில்லை.

வவனியா கொலை முயற்சிவழக்கு

# ‘தன்னுடன் வருமாறு எதிரி அழைத்தபோதுமறுத்தேன்’

யாழ்ப்பாணம், ஞாயிறு எனது வீட்டில் தங்கியிருந்த எதிரியான நடராசா சம்பவதினம் என்னை தன்னுடன் வரும்படி அழைத்தார். நான் மறுத்து வீட்டைவிட்டுப் போகும்படி கூறினேன் அதன்பின் அவர் வந்து இந்த உலகத்தில் வாழமுடியாது வாழ விருப்பமில்லை தான் மருந்து குடித்து சாகப்போகிறேன் என்றுர் எங்கள் வீட்டில் குடிக்கவேண்டாம் வெளியில் போய் மருந்து குடித்து சாகும்படி கூறினேன்.

வவுனியா கொலை முயற்சி தற்கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த கருப்

(5ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
ONE-DOLLAR
டொலர்
அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தொளி எழுதிய 7-ம், 8-ம் வகுப்பு சமூகவியல் (சரித்திரம், புவியியல், குடியுரிமை) வினு விடை வெளிவந்துவிட்டது 7-ம் வகுப்பு 75 சதம், 8-ம் வகுப்பு 90 சதம். கிடைக்குமிடம்:- ஸ்ரீலங்கா புத்தகநிலையம், யாழ்ப்பாணம் விஜயலட்சுமி புத்தகநிலையம், வெள்ளவத்தை. 2874

ஒஸ்டின் A 40 சொமசெட் ஈ வை. எண்ணுயிரம் தொடர் புதிய டயர், பட்டரி ஒரே சொந்தக்காரர் என்ஜின் சிறந்த நிலையிலுண்டு. பார்வையிடவும். 47, புதிய தெரு. கொட்டடி, யாழ்ப்பாணம். 2876

### விற்பனைக்கு

காணி

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நல்லூர் நாயன்மார்காடு மகேஸ்வரி வித்தியாசாலைக்கு அருகாமையில் 6 பரப்பு வீடு கட்டக்கூடிய சிறந்த காணி பிரயோசனங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் 2 பரப்பு காணித்துண்டுகளாகக் கொடுக்கப்படும். பரப்பின் விலைரூபா 2500/- தொடர்பு கொள்க. வீ. தயாபரன், குமார வீதி, நல்லூர். 2875

REGAL - Jaffna
Daily 4 shows
George Kennedy
in
GUNS OF THE MAGNIFICENT SEVEN
(Technicolor)

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - சோ நடித்த
ஜெமினியின்
விளையாட்டுப் பிள்ளை

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் ஜெயலலிதா நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ நிர்மலா
★ முத்துராமன் ★ லெட்சுமி
சுந்தரராஜன் — நாகேஷ் — வி.கே.ராமசாமி
மற்றும்பலர் திறம்பட நடித்த
சிறந்த ஹாஸ்ய சித்திரம்
வீட்டுக்கு வீடு
(எஸ். பி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு)

8-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் பேயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
சிவாஜி
காஞ்சனா
எம்.என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





சிவந்த மண்


## அறிவித்தல்

பாஷையூரில் அண்மையில் கட்டப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருக்கும் புதிய வீடுகள் எட்டும், வீடு இல்லாதவர்களுக்கும், தமது பிள்ளைகளுடனோ அல்லது நெருங்கிய உறவினர்களுடனோ வாழ்வதற்கு வசதியற்றிருப்பவர்களுக்கும் சமீபத்தில் வழங்கப்படவுள்ளன.

பிள்ளைகள், சார்ந்து வாழ்பவர்களை உள்ளடக்கிய குடும்பத்தில் உள்ளவர்களது எண்ணிக்கை மற்றும் விண்ணப்பகாரருக்கு அல்லது பிள்ளைகளுக்கு அல்லது அவரைச் சார்ந்து வாழும் அவரது நெருங்கிய உறவினர் யார் ஒருவருக்கேனும் சொந்தத்தில் வீடு ஏதும் உண்டா இல்லையா என்பது போன்ற முழு விபரங்களுடன் மேற்படி வீடுகளுக்கான விண்ணப்பங்கள் பாஷையூர் வட்டார மக்களிடமிருந்து எதிர்வரும் 12-3-71-ம் திகதிக்கு முன் மாநகர ஆணையாளருக்குக் கிடைக்கக்கூடியதாகக் கோரப்படுகின்றன.

நீர் விநியோகங்கள் மற்றும் மின்சார கட்டணங்கள் புறநீங்கலாக, ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபா 20/- மாதாந்த வாடகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

வாடகைக் குடிகளாகத் தெரிவுபெறுபவர்கள் மன்றத்துடன் செய்துகொள்ள வேண்டியதான ஓர் ஒப்பந்தத்தை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை புதுப்பித்துக்கொள்ளல் வேண்டும்.

தேவைப்படும் ஏனைய விபரங்களை மாநகர ஆணையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. பி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
5-3-1971 3201

## பௌர்ணமிக் கலைவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற 'பௌர்ணமி நாள் கலைவிழா' வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெறும். யாழ்மாநகர முதல்வர் அ. ச. துரைராசா தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் 'அடையாள அட்டை' 'வெள்ளிக்கிண்ணம்' ஆகிய இரு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.


நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30 9-30
போயாநாட்கள் 2-30
சுந்தரராஜன் - விஜயா நடித்த
நாணல்

3வது வாரம்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா நடித்த
துலாபாரம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 4-45, 7-00, 9-45
GUN POINT

MANOHARA
Jaffna
Daily 4 Shows
David Niven - Eli Wallach
in
THE BRAIN
A Thinking Man's Movie
(Technicolor - Franscope)


# கிழக்குமாகாணச் செய்திகள்

### வைத்திய வசதிகள் சீர்கேடு

பொத்துவில் பகுதியின் வைத்திய வசதிகள் சீர்கேடான நிலையிலிருப்பதாகப் பொத்துவில் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் உதவி சுகாதார அமைச்சர் திருமதி சிவாஒபயசேகராவிடம் எடுத்துக் கூறியுள்ளார் உடனடியாக வைத்திய வசதிகளை விஸ்தரிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

### "உண்மை முஸ்லிம்களாக வாழவேண்டும்"

"உலகமெங்கும் வாழ்கின்ற இஸ்லாமிய மக்கள் சிறப்புடன் நினைவுகொள்ளும் 'முஹர்ரம்' தினத்தில் நாம் இஸ்லாமிய பண்புகளையும் அறநெறிகளையும் கைக்கொண்டு உண்மை முஸ்லிம்களாக வாழவேண்டும்"

இவ்வாறு நிந்தவூர் அல்-அஷ்றக் வித்தியாலயத்தில் நடைபெற்ற இஸ்லாமிய புதுவருடதின விழாவில் பேசியமேற்படி வித்தியாலய அதிபர் ஜனுப் ஜே எம் சம்சுதீன் மௌலானு கூறினார்.

### இன்று சலுசலாகிளை திறக்கப்படும்

கல்முனையில் அமைக்கப்பட்டுள்ள லங்கா சலுசலாக்கிளை இன்று திறந்துவைக்கப்படவுள்ளது. கல்முனைத்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனுப் எம் சி அகமது கிளையை திறந்துவைப்பார்.

### 300பேர் வேலைநிறுத்தம்

கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு சபையில் வேலைபார்க்கும் சுமார் 300 பேர் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்சன் தங்களுக்கும் வழங்கப்படவேண்டுமென்பது இவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாகும்,

மகஜர்

வலையிறவுத்துறைக்குப் பாலம் அமைப்பது மட்டுமின்றி கன்னங்குடாஊடாக படுவான்கரை வரையும் வீதியும் அமைக்கவேண்டும் என்று காத்தான்குடி முஸ்லீம் வர்த்தகர்கள் சங்கம் பிரதமமந்திரியிடம் கேட்டுள்ளது.

### செயற்குழுக்கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் இம் மாதம் 17-ம்திகதி களுவாஞ்சிக்குடியிலுள்ள தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தின் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது.

### வைத்தியசாலைக்கு மின்சாரம்

பொத்துவில் அரசினர் வைத்தியசாலைக்கு மிகவிரைவில் மின்சாரவசதி அளிக்கப்படவுள்ளது, தற்போது இந்த ஆஸ்பத்திரியில் மண்எண்ணை விளக்குகளே பாவிக்கப்படுகின்றனர்.

## பிரச்னை தீர்க்க விசேஷ பிரிவு

கோட்டை, சனி

ஆசிரியர்களது பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை யெடுப்பதற்கு 2 அதிகாரிகள்கொண்டதொரு விசேஷ பிரிவை கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளர் டாக்டர் பி. உடகம அமைத்துள்ளார்

திரு மல்லசம் விஜிதபால, திரு. டபிள்யு. எம் ஏ. கொடாவத்தை ஆகிய இருவரும் இவ்விசேஷ பிரிவில் இடம்பெறுகிறார்கள்.

ஆசிரியர்களது பென்ஷன் வழங்கலில் தாமதம், சம்பளப்பிரச்னை, சேவைப் பத்திரம் சம்பந்தமான பிரச்னைகள் முதலியனபற்றி ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க இவ்விசேஷ பிரிவு அமைச்சுக்கு உதவிசெய்யும்.

......

பருத்தித்துறை, சனி

நெல்லியடிப் பகுதியில் சட்டவிரோதமாகச் சாராயம் விற்பதாகச் சிலர் நெல்லியடிப் பொலிசாரால் விசாரணைகுட்படுத்தப்பட்டுள்ளனர். சில இளம் பெண்கள் மீது பொலிசார் வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளனர்.


பிறேமா போசனசாலை
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
BREMA LUNCH HOME
கர்ப்பவதிகளுக்கும், பிரசவித்த தாய்மார்களுக்கும்
மற்றும்
நோயாளர்களுக்கும் அரைத்த பத்தியக் குழம்புடன்
சாப்பாடு வழங்கப்படும்.
விஜயம் செய்யுங்கள்.
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
பிறேமா போசனசாலை
உரிமையாளர்:- நாகலிங்கம் முருகேஸ் 2799

கலாநிலைய
பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்
இரு கலரில் அழகிய முறையில் அச்சடித்த
(50 மூலப் பிரதிகளும், அதன் பிரதிகளும்)
பற்றுசீட்டுப் புத்தகங்கள்
எம்மிடம் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
ஒவ்வொரு 25 புத்தகங்களுக்கும்
பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வைத்து
எழுதுவதற்கு அழகான
மட்டைக்கவர் இலவசமாகக் கொடுக்கப்படும்.
மேலும் விபரங்களுக்கு நேரில் எம்மிடம்
தொடர்பு கொள்ளவும்.
"ஈழநாடு"
வர்த்தக அச்சகப்பகுதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஷ்டஈடும், கடத்தல்காரர்களையும் கொடுத்தால் விமானசேவை

## ஜகஜீவன்ராம் தகவல்

புதுடில்லி, மார்ச் 6

இந்தியாவுக்கு மேலாக பாகிஸ்தான் விமானங்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது பற்றிப் பரிசீலனை செய்வதென்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் தெரிவித்தார்.

காஷ்மீரிலிருந்து வழி மறித்து திசை திருப்பி லாகூருக்குக் கொண்டு சென்று வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்துக்கு பாகிஸ்தான் அரசாங்கம் நஷ்டஈடு கொடுப்பதுடன் விமானத்தைக் கடத்திச் சென்ற இருவரையும் இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் இவற்றுக்கு பாகிஸ்தான் சம்மதித்தால்தான் இந்தியாமீது பாகிஸ்தான் விமானங்கள் செல்வதற்கு மீண்டும் அனுமதிப்பது பற்றி இந்தியா ஆலோசிக்குமென்று ஜகஜீவன்ராம் தெரிவித்தார்.

# "முதலாளித்துவமற்ற பாதையில் இலங்கை செல்லவேண்டும்"

## ரஷ்ய பத்திரிகைக்கு திரு. கெனமன் பேட்டி

மாஸ்கோ, மார்ச் 5

'பெரும் முதலாளிகளும், அந்நிய ஏகபோக கம்பனிகளும் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் பிரச்னையாக இருக்கிறது. அரசாங்கத் துறைக்கு எதிராக பூர்ஷுவா வர்க்கம் பல திசைகளிலும் போராட்டம் நடத்துகிறது. ஆகவே பரந்த உழைக்கும் மக்களின் அரசியல் ஆதரவு எமக்கு தேவைப்படுகிறது'.

இப்படி கூறினார் இலங்கை அமைச்சரும், தொழிற் சங்கத் தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சி பொதுக் காரியதரிசியுமான திரு. பீட்டர் கெனமன் ஐம்பது லட்சம் பிரதிகள் விற்பனையாகும் 'துரு' என்ற சோவியத் தொழிற் சங்க பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே இப்படி கூறியிருக்கிறார்.

'நாம் பதவியேற்ற போது நாடு பொருளாதார நிதி நெருக்கடிக்கூடாக சென்று கொண்டிருந்தது. வெளிநாட்டு முதலாளிகளுக்கு கடன் பட்டிருந்தது. ஏறத்தாழ வங்குரோத்தாகி இருந்தது வேலையில்லாப் பிரச்னை உக்கிரமாகிக் கொண்டிருந்தது ஏழு லட்சம் பேர் வேலைவசதியின்றி தத்தளித்தனர்' என்று திரு. கெனமன் கூறினார்.

புதிய நிர்வாகம் மக்களின் ஜனநாயக உரிமைகளை விஸ்தரித்தது. அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்கியது என்றும் திரு கெனமன் கூறினார். மேலும், விதேசிய கம்பனிகளின் உடைமை தேசியமயமாக்கப்பட்டன என்று அவர் கூறினார். புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா வர்த்தக கூட்டுத்தாபனம் பொருளாதாரத்தை வளம்படுத்த ஏதுவாய் இருக்கும். பண்டம் போக்குவரத்து விஷயத்தை பிரிட்டிஷ், ஆஸ்திரேலியக்கப்பல் கம்பனிகள் உயர்த்தியிருப்பதைத் தொடர்ந்து அரசாங்கம் நடவடிக்கை யெடுத்து வருகிறது என்று அவர் கூறினார்

பொதுத் துறையை அபிவிருத்தி செய்து முதலாளித்துவமற்ற மார்க்கத்தில் செல்லவேண்டும். இதற்கு பொதுத் துறையை பலப்படுத்தி வங்கிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்று திரு. கெனமன் கூறினார்.

......

### சோவியத் சபையில் இலங்கைத் தூதர்

மாஸ்கோ, மார்ச் 5

சோவியத் சுப்ரீம் சோவியத்துக்கு (ஆட்சிமன்றம்) இலங்கைத் தூதுவர் திரு. சீ. டி. சிரிவர்தன விஜயம் செய்தார்.

யூனியன் சோவியத் சபையில (மேல்சபை) தலைவர் அலக்ஸி ஷிட்புகோசி அவரை வரவேற்றார்

சமாதானத்தைப் பேணி பாதுகாக்கும் பணியில் இலங்கை ஆற்றிவரும் பங்கை சோவியத் யூனியன் மெச்சுவதாக அவர் கூறினார்.

— —

### திட்டம் இல்லையாம்

வாஷிங்டன், மார் 6

வடவியட்னமை ஆக்கிரமிக்கத் தென்வியட்னமியருக்கு விமானப்படை உதவுவது பற்றி எந்தவிதமான திட்டங்களையும் அமெரிக்கா கருத்திற் கொள்ளவில்லை என அமெரிக்க ஜனாதிபதி திரு நிக்சன் அறிவித்துள்ளார்

சமீபத்தில் வாஷிங்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மகாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அதிபர் நிக்சன் மேற்கண்ட தகவல் தெரிவித்துள்ளார்

ஜனாதிபதி வான்தியூ வடவியட்னாம் தற்பாதுகாப்புக்காக ஆக்கிரமிப்பதைத்தான் தடைசெய்யப் போவதில்லையெனவும் அதிபர் நிக்சன் குறிப்பிட்டார்.

— —

### தொழிலாளர் வெளிநடப்பு

தாவடி, சனி

சம்பளத் தகராறு காரணமாக தாவடியிலுள்ள ஒரு சுருட்டுத் தொழிற்சாலையில் வேலைக்குச் செல்லாதிருந்த தொழிலாளர்கள் தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து மீண்டும் வேலைக்குச் சென்றதைத் தொடர்ந்து பிரஸ்தாப தொழிற்சாலை மனேஜரும் மற்றும் அங்கு வேலை செய்துவந்த 50 தொழிலாளரும் வெளிநடப்புச் செய்துள்ளனராம்.

### கழுத்து நெரித்துக் கொலை

நோர்வூட், சனி

நோர்வூடிலுள்ள சின்றே அணைக்கட்டின் மேலால் நடந்து சென்றுகொண்டிருந்த சுமார் 14 வயது மதிக்கத்தக்க இளம் பெண்ணை தவபாக்கியம் என்பவர் கழுத்து நெரிக்கப்பட்டு மரணமடைந்தார். இதைத் தொடர்ந்து காவலாளியொருவரை நோர்வூட் பொலிசார் கைது செய்துள்ளனர்

### 450 கோடி வருடக்கல்

வாஷிங்டன், மார்ச் 6

அப்பலோ-14 வீரர்கள் சந்திரனிலிருந்து கொண்டுவந்த பாறைக்கல் 350 கோடியிலிருந்து 450 கோடிவருடங்கள் பழமையானது என்று விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### ஈராக்கில் புதிய எண்ணெய்க்குழாய் வழி

பக்தாத், மார்ச் 25

பாரசீக வளைகுடா துறைமுகமான ஃபாஓவுடன் அர்ருமைலா (தென் ஈராக்) எண்ணெய்க் கிணறுகளை இணைக்கும் எண்ணெய் குழாய் வழி நிர்மாண வேலைகள் ஈராக்கில் ஆரம்பித்துவிட்டன.

நிர்மான வேலைகளில் சோவியத் நிபுணர்கள் ஒத்துழைக்கின்றனர்:

— —

### விலங்கு வளர்ப்பு

கோட்டை, சனி

கூட்டுறவு அடிப்படையில் மிருக வளர்ப்பை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை யெடுக்கவிருக்கிறது. இதற்காக அரசாங்கம் திட்டமொன்றையும் தயாரிக்கிறது,

இத்திட்டத்தில் கூட்டுறவுப் பிரிவொன்று மேற்படி விலங்கு வளர்ப்பு வேளாண்மையில் ஈடுபட இயங்கும். இக்கூட்டுறவுப் பிரிவின் பல்வேறு கிளைகள் ஒவ்வொரு பிரிவிலும் நிறுவப்பட்டு இத்தொழிலை ஆரம்பத்தில் இருந்து வளர்க்கும் எனத் தெரியவருகிறது.

......

### ஆராய வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'முத்திரைச் சந்தை, கல்வியன்காடு, நல்லூர், நாயன்மார்காடு தாமரைக்குளத்தடி முதலிய இடங்களில் நல்லூர் மன்னன் சங்கிலியனின் சாசனங்கள் பற்றி ஆராயவேண்டும்.'

இவ்வாறு சங்கிலி நாயன்மார்கட்டு எழுச்சி விழாவை ஒழுங்குசெய்துள்ள குழுவினர் பல்கலைக்கழக நிர்வாகத்தினரையும், தனிப்பட்ட சரித்திர ஆராய்ச்சியாளர்களையும் மகஜர்மூலம்கேட்டுள்ளனர்.

### 'ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு கோயில்'

பருத்தித்துறை, சனி

''ஒவ்வொரு பாடசாலையிலும், ஒவ்வொரு ஆலயம் அமைக்கப்பட வேண்டும் விஞ்ஞான பாடங்களைத் தத்துவார்த்த ரீதியாகவும், அனுபவரீதியாகவும் கற்பது போன்று, சமயத்தையும் கற்பது அவசியம்''

இவ்வாறு நேற்று முன்தினம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம் தமக்கு அளித்த பாராட்டுவிழாவில் பேசிய இளைப்பாறும் அதிபர் செல்வி. கே சரவணமுத்து கூறினார். முன்னை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. சி. சுந்தசாமி விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் உடுப்பிட்டி எம் பி திரு. க ஜெயக்கொடி பேசுகையில் வயது ஏறக்கொண்டேபோக அனுபவமும் ஆற்றலும் பெருகும் என்ற பொது விதிக்கு மாறாக அரசாங்கம் 55 வயதில் இளைப்பாறச் செய்வது சுயநலமற்ற சிறந்த ஆசிரியரின் சேவைக் காலத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது பொதுவாக நாட்டிற்கும் குறிப்பாக தமிழ் மாணவருக்கும் ஒரு சாபக்கேடாகும். என்றார்.

முன்னாள் உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் உட்படப் பலர் பேசினர்.

......

### இலங்கைக்கு அமெரிக்க செனட்டர் பாராட்டு

வாஷிங்டன், மார்ச் 6

இலங்கை மக்களின் உதாரணம் 'உலகின் ஏனைய நாடுகளுக்கு உணர்ச்சியூட்டுவதாக' இவ்வாறு மெயின் மாநிலத்தின், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் எட்மண்ட் எஸ். மஸ்கி குறிப்பிட்டார்.

மார்ச் மாதம் முதலாம் திகதி செனெட் சபையில் நிகழ்த்திய ஒரு சுருக்கமான உரையில் செனெட்டர் மஸ்கி இலங்கை மக்களுக்கு பாராட்டுதல்களை தெரிவித்தார்

அமெரிக்க காங்கிரஸ் சபையின் பதிவேட்டில் இடம்பெற்ற இந்த அறிக்கையின் வாசகம் வருமாறு:

'தலைவர் அவர்களே, பெப்ரவரி மாதம் 4-ம் திகதி இலங்கை தனது 23-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. எம வரலாற்றில் கடந்த இருபது ஆண்டு காலமாக இலங்கை ஒரு ஸ்திரமான ஜனநாயக நாடாக இருந்து வருகின்றது. அத்துடன் தேர்தல்களிலும் இதர நாட்டுப் பணிகளிலும் தலைசிறந்த ஜனநாயக பாரம்பரியங்களை பின்பற்றி வருகின்றது.

'இலங்கை மக்களுக்கு நான் பாராட்டுதல்களை தெரிவிக்கும் அதே வேளையில் அவர்களின் உதாரணம் உலகின் ஏனைய நாடுகளுக்கும் உணர்ச்சியூட்டுவதாக.'

......

### வரவில்லையாம்

அம்பன், சனி

குடத்தனைக் கிராமசபையின் முதலாம் வட்டார உறுப்பினர் திரு. யா. சிமியோம்பிள்ளை மேற்படி கிராமசபையின் மூன்று கூட்டங்களுக்கு தொடர்ந்து சமுகமளிக்கவில்லையென குடத்தனைக் கிராமசபை முதல்வர் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

### மிருகக்காட்சிசாலை அறிவிப்பு

கொழும்பு, சனி

அண்மையில தெகிவளை மிருகக்காட்சிச்சாலையில் சிங்கம் ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரியில சிகிச்சைபெற்று வந்த 20 வயது ஏ. திலகரத்ன என்னும் இளைஞர் குணமடைந்து வருகிறார்.

சில இளைஞர்கள் மேற்படி சிங்கத்துக்குக் கோபம்வரத்தக்கவகையில் நடந்து கொண்டதாலேயே சிங்கம் சுவருக்குமேலாக 20 அடி தூரம் பாய்ந்து திலகரத்னவைத் தாக்கியதாக மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிருகக்காட்சிச்சாலைக்கு வரும் பொதுமக்கள் அங்குள்ள மிருகங்களைத் துன்புறுத்தும் செயல்களைச் செய்யவேண்டாம் என்றும், மிருகங்களுக்கு கல்வீசியோ தின்பண்டங்களை கூடுகளுக்குள்ளே, இடங்குகளுக்குள்ளோ வீசவேண்டாம் என்றும் மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (சி. பி ஏ

......

### பனம் பொருள் பற்றி ஆராயும் குழு

எழுதுமட்டுவாள், சனி

பனம்பொருள் பற்றி ஆராய்ச்சி செய்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கென குழுவென் தெரிவு செய்யப்பட்டுள்ளது

நாவற்குழி கிராமசபை மண்டபத்தில் தென்மராட்சி காரியாதிகாரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு வி. இரத்தினம் திரு என். சண்முகரத்தினம் திரு. வ இரத்தினம், திரு. பொ. நமசிவாயம், திரு. எஸ். சடாட்சரம் ஆகியோர் குழுவின் முக்கிய அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவினர் இப்பகுதியில் பனம் பொருள் உற்பத்தியைப் பெருக்கும்வகையில் ஆராய்ச்சியை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இவ்வாராய்ச்சிக்குழு பிரதான மூலப்பொருள் மூலப்பொருள் கிடைக்குமிடம் எந்த விகிதத்தில் அவை கிடைக்கும் என்பனபற்றியும் ஏற்றுமதி வசதி சேகரிப்புமுறை மின்சார வசதி வாசனவசதி விஞ்ஞான முறையில் பொருட்களை நவீனப்படுத்துவதற்கான வழிகள் என்னவென்பதுபற்றியெல்லாம் விரிவாக ஆராயும்.

இக்குழுவினர் இம்மாதம் 18-ம் திகதிதமது ஆராய்ச்சி அறிக்கையை காரியாதிகாரியிடம் சமர்ப்பிப்பார்கள்.

### அறிவித்தல் வெளிவரலாம்

கோட்டை, சனி

கட்டாய சேமிப்பு நிதியைத் திருப்பிக்கொடுப்பது சம்பந்தமான அறிவித்தல் ஒன்று விரைவில் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

இலங்கையைவிட்டு வெளியேறவிருப்பவர்களுக்கும் 1971—72 ஆண்டில் தலன் வரியைச்செலுத்த உள்ளோருக்கும் கட்டாய சேமிப்புநிதி திருப்பிக் கொடுக்கப்படுமென்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகிடை சிங்கத்தைப் போல் அஞ்சாநெஞ்சுடனும் ஆண்மையுடனும் திகழ்; பொறுமையிலும் சேவையிலும் ஒட்டகத்தை ஒத்திரு; சாந்தம், பொறை, வள்ளன்மை இக் குணங்களில் பசுவைப்போல் விளங்கு. — ஸ்ரீ அரவிந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 23ந் திகதி (7-3-71)


## வடக்கில் எண்ணெய் வளம்

வடக்கில் நிலத்துக்கடியில் எண்ணெய் வளம் இருப்பதை சோவியத் நிபுணர் குழு உறுதிப்படுத்தியிருக்கிறது. எண்ணெய் எடுக்கும் வேலைகள் இவ் வருட முடிவுக்குள் ஆரம்பமாகும் என்று பெற்றோலியம் கூட்டுத்தாபன அதிபர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி அறிவித்திருக்கிறார் இலங்கையிலும் இது நடைபெறக் கூடிய காரியமா என்று ஒரு காலத்தில் ஏளனம் செய்தவர்கள் இதை அறிந்து திகைப்படையக் கூடும். ஆனாலும் நிலத்துக்கடியில் எண்ணெய் மட்டுமல்ல வடபகுதியின் நிலத்தின் அடியிலும் கடல் படுக்கைகளிலும், கடலிலும் நிலத்துக்கு மேலேயும் நமக்கும் பிறர்க்கும் தேவையான திரவியங்கள் நிறைய இருக்கின்றனவென்பதையும் தொடர்ந்து ஆராய்ச்சிசெய்து தீவிர முயற்சிசெய்தால் நாடு சகல வழிகளிலும் முன்னேற முடியுமென்பதற்கும் இந்த நிபுணர் குழுவின் சிபார்சு முன்னோடியாக இருக்க வேண்டும்.

வடபகுதியில நிலத்துக்கடியில் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாக வெளிநாட்டு நிபுணர்கள் தெரிவித்திருந்ததை இங்கு சிலர் ஆதாரம் காட்டினர். ஆயினும் இதை ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் என்ன காரணத்தாலோ ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. முன்னைய அரசாங்கம் இதுவிஷயத்தில் சிறிது அக்கறை செலுத்தி பிரெஞ்சு நிபுணர் கோஷ்டியை வரவழைத்து ஆராய்ச்சி நடத்தியது. மன்னார்ப் பகுதியிலும் மற்றும் வடக்கின் சில பகுதிகளிலும் எண்ணெய்ப்படிவங்களிருப்பதாக இக் குழு தெரிவித்திருந்தது. இந்த நிபுணர் குழுவின் ஆராய்ச்சிக்கும் கூட சில இடையூறுகளை சில சக்திகள் ஏற்படுத்தியதாகவும் அச் சமயத்தில் செய்திகள் வெளிவந்தன. இப்படி இடையூறுகள் ஏற்படுவது விந்தையுமல்ல. இந்தியாவில் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டபோதும் எண்ணெய் உற்பத்திக்கு முயற்சிசெய்யப்பட்டபோதும் அங்கு இதைவிட பெரும் இடையூறுகள் ஏற்பட்டதும் இவற்றையெல்லாம் தாண்டி அங்கு பல இடங்களிலும் இப்போது எண்ணெய் உற்பத்திசெய்யப்படுவதும் உலகறிந்த விஷயம்.

மன்னார்ப் பகுதியில் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாகவும் இங்கு எண்ணெய் எடுக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படலாமென்றும் பிரெஞ்சு நிபுணர் குழு தெரிவித்திருந்த சிபார்சுபற்றி சுமார் ஒரு வருடத்துக்கு முன்னரே நாம் செய்தி வெளியிட்டிருந்தோம்.

ஆனாலும் அரசியல், பிரதேசம் மற்றும் சில காரணங்களுக்காக இம்முயற்சியில் முன்னைய அரசாங்கம் ஈடுபடத் தயங்கியிருக்கவேண்டும். பிரெஞ்சு நிபுணர் குழுவின் ஆராய்ச்சியையும் சிபார்சையும் சோவியத் நிபுணர் குழு இப்போது உறுதிப்படுத்தியிருக்கிறது. இச் சிபார்சைத் தொடர்ந்து எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கிடைத்துள்ள அறிவிப்பு மகிழ்ச்சியளிக்கும்.

ஆனாலும் பிரெஞ்சு நிபுணர் குழுவின் ஆராய்ச்சியிலும் அறிக்கையிலும் நம்பிக்கை யேற்படாதது போல் ரஷ்ய நிபுணர் குழுவின் ஆராய்ச்சியிலும் சிபார்சிலும் நம்பிக்கை கெட்டு மற்றும் ஒருநாட்டு நிபுணர் குழு வந்து உறுதிப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படுமோ வென்றுகூட யோசிக்க வேண்டியிருக்கிறது.

கட்சி அரசியல் பிரச்னையும் ஆதிக்கப்போட்டியும் இங்கு இல்லாமல் மற்ற நலன்கள் எல்லாவற்றையும்விட நாட்டின் நலனும் நாட்டு மக்களின் நலனுமே பெரிது என்ற மனப்பான்மை நம் நாட்டுத் தலைவர்களிடம் இருக்குமானால் நம் நாட்டில் எப்போதோ எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும், நாட்டின் பொருளாதார நிலையும் இந்த அளவுக்கு மோசமாகியிருக்காது.

எண்ணெய்ப் படிவங்கள் நிறைய இருப்பதாக வெளிநாட்டு நிபுணர் குழு சிபார்சு செய்திருப்பதை உதாரணமாகக்கொண்டு பொலிகண்டி மணலிலிருந்து தரம்வாய்ந்த கண்ணாடிப் பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து சீனியை எதிர்பார்க்காமல் பனங்கள்ளிலிருந்து இங்கேயே சீனியையும் மற்றும் நமக்குத் தேவையான பொருள்களையும் உற்பத்திசெய்வதற்கான தொழிற்சாலைகளை நிறுவ வெளிநாட்டு நிபுணர்களின் சிபார்சுகளுக்குக் காத்திராமலே — அரசாங்கம் முன்வருவது விவேகமான செயலாக இருக்கும்.

## 35 தானியக் களஞ்சியங்கள்

மூதூர், சனி

திருக்கோணமலைப் பகுதி 2 லட்சம் ரூபா செலவில் 35 நெற்களஞ்சியங்களை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நெற்களஞ்சியங்கள் யாவும் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நேரடியாக அவர்களுக்குக் கஷ்டம் விளைவிக்காதவகையில் நெல்லைக் கொள்வனவு செய்யவுள்ளன.

இந்த 35 களஞ்சியங்களில் 9 களஞ்சியங்கள் 5000 புசல் நெல்லைச் சேமிக்கத்தக்கன. 21 களஞ்சியங்கள் 2500 புசல் நெல்லைக் கொள்வனவு செய்யத்தக்கன 4 களஞ்சியங்கள் 1000 புசல்களையும் மற்றொன்று 7000 புசல் நெல்லைக் கொள்வனவு செய்யத்தக்கவையாக அமையும் என விவசாய இலாகாவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### தமிழ்நாடு தேர்தல்களம்

# "தேர்தலில் நான் தோற்றால் என் வீட்டை கொடுப்பேன்"

## முதலமைச்சர் கருணாநிதி முழக்கம்

(நமது சென்னை நிருபர்)

சென்னை, மார்ச் 6

சைதாப்பேட்டை தொகுதியில் நான் தேர்தலில் தோற்றால் சிண்டிகேட்டுக்கு எனது வீட்டையே கொடுத்துவிடுகிறேன் என்று முதல் அமைச்சர் மு கருணாநிதி தஞ்சை மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார்.

தஞ்சை மாவட்டத்தில் முதல் அமைச்சர் கருணாநிதி சூறாவளி சுற்றுப்பிரயாணம் செய்து தேர்தல்பிரசாரம் செய்தார்.

திரு கருணாநிதி தொடர்ந்து கூறியதாவது: சென்னை நகரில் எல்லாத் தொகுதிகளையும் நாங்களே கைப்பற்றுவோம். சென்னை சைதாப்பேட்டைத் தொகுதியில் தோற்றுவிட்டு கருணாநிதி வருகிறார் என்று சிலர் இங்கு கூறியதாகக் கேள்விப்பட்டேன். நான் தோற்றால் எனது வீட்டையே வெற்றி பெற்றவரிடம் கொடுத்துவிடுகிறேன். நான் வெற்றி பெற்றால் என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர் வீடுஇருந்தால் வீட்டையே அல்லது தன்னையோ தந்துவிடத் தயாரா?

7-ம் தேதி நடக்கும் தேர்தலில் முற்போக்கு கூட்டணி பெருமளவில் வெற்றிபெறும் தமிழ் நாட்டில் தி. மு கழக ஆட்சியும் டெல்லியில் இந்திரா ஆட்சியும் ஏற்படும். 7 கட்சிகள் இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறோம் 4 கட்சிகளை சேர்ந்து சிண்டிகேட் காங்கிரஸ் போட்டியிடுகிறது

### ஹிந்தியை தடுக்க

இந்திப் பேயை மீண்டும் நுழைய விடாமல் தடுக்க தி மு கழகத்தையே ஆதரிக்க வேண்டும்.

கொலை செய்தவர்களையெல்லாம் உத்தமர் பட்டியலில் சேர்த்துக்கொண்டு தி மு கழகத்தின் மீது அவதூறு கூறுவது வேதனைக்குரியது என நேற்று முதல் அமைச்சர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்தஅறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: பொதுத் தேர்தலில் முதல் கட்டத் தேர்தல் முடிந்த பிறகு சென்னையிலும், மற்றும் சில இடங்களிலும் நடந்துள்ள கலவரங்கள் தமிழ்நாட்டின் அரசியல் பாட்டிற்கு ஏற்றதல்ல என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை போன்ற இடங்களில் நடக்கும் கலவரங்கள் பற்றி ராஜாஜி குறிப்பிடும்போது தேவையில்லாமல் தி மு கழகத்தை இழுத்து அந்தக்கட்சி விடுதலைப் போராட்டத்தில் காட்டிக்கொடுக்கும் உளவாளிகளாக இருந்த ஜஸ்டிஸ் கட்சியின் வாரிசு என்று குறிப்பிட்டு இருக்கிறார். அவர் வாதம் சரியானால் அந்த வழியில் வந்தவர்கள் பலர் இன்று சிண்டிகேட் காங்கிரஸில் இருக்கிறார்கள். ராஜாஜியே அதையோசித்துப்பார்த்தால் யார் யாரென்று தெரியும்.

1942ல் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தின் போது ராஜாஜி காங்கிரஸ் இயக்கத்தைவிட்டு ஒதுங்கி இருந்ததற்கு காட்டிக் [illegible] யெடுப்பு, பாகிஸ்தான் படை எடுப்பு ஆகியவற்றின்போது தான் வாங்குகிற ஆயிரக் கணக்கான ரூபாய் பென்ஷன் பணத்திலிருந்து ஒரு கணிசமான தொகை யுத்த நிதிக்கு கொடுக்க விரும்பாதவர் இந்தியாவைப் பாதுகாப்போம் என்று பேசுவது வேடிக்கையானது.

அந்த நேரத்தில் இந்தியாவில் உள்ள ஏழை, எளியவர்கள் சிறு குழந்தைகள் கூட கட்சிசார்பற்ற முறையில் யுத்தநிதி கொடுத்தார்கள். தி. மு. கழகம் பெரும் நிதிதிரட்டி அன்றைய முதலமைச்சர் காமராஜரிடம் அளித்தது. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தனிப்பட்ட முறையில் 75,000 ரூபா முதல் தவணையாக யுத்த நிதிக்கு அளித்தார்.

1942 லும், சீன--பாகிஸ்தான் ஆக்கிரமிப்பிலும், இந்தியாவைக் காக்கவராத ராஜாஜி இப்போது இந்தியாவைக் காப்போமென்பதும், ஜனநாயகத்திற்கு வக்காலத்துவாங்குவதும் முன்னுக்குப்பின் முரணானது.

தமிழ் நாட்டில் நேற்று முன்தினம் இரண்டாவது கட்ட வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெற்றது. நீண்ட நேரம் ஆண்களும் பெண்களும் கியூவரிசையில் காத்து நின்று வோட்டுபோட்டார்கள். இரண்டாவது கட்டமாக 13 எம்.பிக்கள் தொகுதியிலும் 78 சட்டசபை தொகுதிகளிலும் தேர்தல் நடைபெற்றது.

### குன்றக்குடி அடிகளார்

ராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடியில் 82-வது வார்டில் காலை குன்றக்குடி அடிகளார் கியூவில் காத்து நின்று ஓட்டுப்போட்டார் பெண்கள் கைக்குழந்தைகளுடன் ஓட்டுப்போட வந்திருந்தனர்.

### பெரியார்

திருச்சியில் திராவிடக் கழகத் தலைவர் ஈ. வே. ரா. பெரியார் ஓட்டுப்போட்டார். புதூர் நாலுரோட்டில் உள்ள ஓட்டளிப்பு நிலையத்தில் அவர் ஓட்டுப்போட்டார். ஓட்டுப் போடுவதற்காக ராமசாமி பெரியாரை தள்ளுவண்டியில் உட்காரவைத்து அழைத்துவந்தார்கள் அவருடன் மணியம்மையும் வந்தார்.

தர்மபுரிமாவட்டம் ஓசூர் தொகுதி சுதந்திரகட்சி வேட்பாளரான வெங்கடசாமி ஓட்டுச்சாவடிக்கு வந்து ஓட்டுப்பெட்டிக்கு மாலையிட்டு பூசைசெய்தார். பின்பு முதலாவதாக தனது ஓட்டைப் போட்டார்.

வடமதுரை தொகுதியில் தென்னம்பட்டி என்ற கிராமத்தை சேர்ந்த 70 பெண்கள் வரிசையாக நடந்து வந்து ஓட்டுப் போட்டார்கள் பல இடங்களில் ஆண்கள், பெண்களை சைக்கிலில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள்.

### எம். ஜி. ஆர். பிரசாரம்

திண்டுக்கல்லில் ஒருலட்சம் பேர் திரண்ட கூட்டத்தில் எம் ஜி ராமச்சந்திரன் பேசினார் எங்கள் ஓட்டு தி மு கழகத்திற்கே என்று [illegible] திருந்த மக்கள் எம் ஜி ஆரிடம் கூறினார்கள்.

கோவை மாவட்டத்தில்



தேர்தல்பிரசாரத்தை முடித்துக்கொண்டு நேற்றுக்காலை எம் ஜி ஆர் திண்டுக்கல் வந்து சேர்ந்தார்.

### 98 வயது மூதாட்டி

தென் ஆற்காடு மாவட்டத்தில் சில இடங்களில் மழை பெய்தது அப்பொழுதும் ஓட்டுப்பதிவு சுறுசுறுப்பாக நடைபெற்றது வீதிவிடங்கன் என்ற கிராமத்தில் ஓட்டுப்போடுவதற்காக பார்வதி என்ற 98 வயது மூதாட்டியை கட்டிலில் வைத்து தூக்கிவந்தார்கள். சிதம்பரத்தில் 90 வயது மூதாட்டியை, தி மு கழக தொண்டர் ஓட்டுப் போட சைக்கிளில் கொண்டு வந்தார்

அம்மன் கோவில் ஓட்டுச் சாவடியில் கால்முடமான சின்னப்ப கவுண்டர் என்பவர் தள்ளுவண்டியில் வந்து ஓட்டுப் போட்டார்.

# வடபகுதி[...] எண்ணெ[...]

## 5000 பே[...]

கொழும்பு, சனி

வடபகுதி எண்ணெய்வள ஆராய்ச்சியில் ரஷ்ய, சீன, பிரான்ஸ் நிபுணர்கள் ஈடுபடுத்தப்படவிருக்கிறார்கள். தேவைஏற்படுமானால் இலங்கையில் நடைபெறவிருக்கும் எண்ணெய்வள ஆராய்ச்சிக்குத் தங்கள் உதவியை எந்நேரமும் வழங்குவதாகமேற்படி 3 நாடுகளும் ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்தன.

தற்போது வடபகுதியிலிருந்து மன்னார்வரையுமுள்ள கரையோரப் பகுதிகளில் எண்ணெய்வளம் இப்பதாக

# அந்தப் ப[...]

## ஏதும் [...]

### பிரதமரு[...]

வேலணை, சனி

கள்ளக்குடியேற்றக்காரர்கள் நாட்டின் எந்தப்பகுதியிலும் இலகுவாக வேலை தேடிக்கொள்ள வசதியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவர்களுக்குச் சிங்களங்[...] அளிக்கப்[...] தாக 'தினகரஸ்', 'சன்' [...] லிய பத்திரிகைகளில் வெளியான செய்திகள் பற்றி ஊர்காவற்றுறைத் தொகுதி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் பிரதமர் திருமதி சிறிமாவோவுடன் தொடர்பு

## மேலும் 25 நீதிமன்றங்களில் சிங்கள மொழி உபயோகம்

கொழும்பு. சனி

மேலும் 25 நீதிமன்றங்களில் விரைவில்சிங்களமொழியில் கருமங்கள் நடைபெறவிருக்கிறது நீதியமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. நிசால் ஜெயவிக்கிரம இத்தகவலைவெளியிட்டார்.

சிங்கள தட்டெழுத்தாளரும், சுருக்கெழுத்தாளரும் பெறுவதிலிருந்த கட்டுப்பாடு காரணமாக இவ்விடங்களில் சிங்களமொழியில் முன்னர் கருமமாற்றுவதை அமுல்நடத்த முடியவில்லை என்றும் அவர் சொன்னார்.

கம்பஹா, குருநாகலை, மாத்தறை, இரத்தினபுரி, பாணந்துறை, ஹொரணை ஆகிய இடங்களிலுள்ள மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளிலும் [...]னைய 4 மாவ[...]ட நீதிமன்[...]களிலும் சி[...]ள மொழியில் அலுவல்கள் தற்போது நடைபெறுகின்றன. (சி. பி. ஏ)

# வாசிகசாலைகளைப் பயன்படுத்த வேண்டும்

— எஸ். ஜே. வி.

மாவிட்டபுரம், சனி

"வாசிகசாலைகளை மக்கள் பயன்படுத்தி அறிவில் உயர்ந்தவர்களாக வேண்டும். படித்தவர்கள் மட்டும் அல்லாது படிக்காதவர்களும் வாசிகசாலையில் புத்தகங்களைப் படிப்பதன்மூலம் முன்னேற வாய்ப்பு ஏற்படும். இதன்மூலம் தமிழரின் மொழி, கலை, கலாச்சாரம் பண்பாடுகளை வளர்க்க வேண்டியது கடமையாகும்."

இவ்வாறு காங்கேசன் துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உடுவில் உள்ளூராட்சி மன்ற புதிய நூல் நிலைய வாசிகசாலையை திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

உள்ளூராட்சி உதவிஆணையாளர் க. நல்லைநாதன் தலைமையில் நடந்த இவ் விழாவில் உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம் பேசுகையில் தெரிவித்ததாவது: இனம் விடுதலை அடைய உணர்ச்சிமிக்க கவிதைகளை ஆக்கவேண்டும்.

இன்றைய கவிஞர்கள் உணர்ச்சிமிக்க கவிதைகளை ஆக்காததால்தான் தமிழ் உணர்ச்சி மக்களிடையே குறையக் காரணமாகஉள்ளது. மேல்நாடுகளில் கவிஞர்கள் உணர்ச்சிமிக்க கவிதைகளை ஆக்கியதால் தான் பெரிய அறிவாளிகள் உருவாகினர்.

இங்குள்ள பெரும்பாலான கவிஞர்கள் தமிழ் உணர்ச்சியை ஊட்டக்கூடிய கவிதைகளை ஆக்கவேண்டும். இது தான் கவிஞர் இன்று எம் இனத்துக்குச்செய்யும் பெருந் தொண்டாகும்.

மற்றும் ச. முத்துலிங்கம், கவிஞர் வி கந்தவனம்; சோ. சேனாதிராசா மயிலை சிவசண்முகதாசன் ஆகியோர் உரையாற்றினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துதியில் விரைவில் ...ணெய் கிணறுகள்!

## ... பேருக்கு வேலைவாய்ப்பு

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ரஷ்ய நிபுணர் குழு அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பித்திருப்பதால் இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிலது கடந்த 3 ஆண்டுகளுக்குமுன்னர் இப்பகுதியில் ஆராய்ச்சிநடத்திய பிரான்ஸ் நிபுணர்குழுவும் இங்கு எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாக ஏற்கனவே அரசாங்கத்திடம் தெரிவித்திருந்தது. பிரான்ஸ் குழு தெரிவித்திருந்த அறிக்கையை தற்போது ரஷ்ய நிபுணர்குழு ஊர்ஜிதம் செய்து எண்ணெய் கிணறுகளை தோண்டும் வேலைகளில் உடனடியாக ஈடுபடும்படி அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளது.

இதற்கான வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும், இதன்மூலம் 5000 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கமுடியுமென்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (சி. பி. ஏ.)

# ... பத்திரிகைச்செய்தியில் ...ம் உண்மையுண்டா?

## ...மருக்கு கா. பொ. கடிதம்

...கொண்டிருக்கிறார்.

இவ்வாறு சிங்களப்பயிற்சி நடைபெறுவதாகத் துப்பறியும் பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், வடக்கிலும் கிழக்கிலும் கள்ளக் குடியேற்றக்காரருக்குச் சிங்களப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஏராளமாக இயங்கிவருவதாக அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும் பிரஸ்தாப செய்திகள் குறிப்பிட்டிருப்பதை திரு இரத்தினம் பிரதமருக்குச் சுட்டிக்காட்டி, துப்பறியும் பொலிசார் இவ்வித அறிக்கை சமர்ப்பித்துள்ளது உண்மைதமனு எனக்கேட்டு, உண்மையில் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்தால் அந்த அறிக்கையின் மூலம் பிரஸ்தாப செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளதா என அறிய விரும்புவதாகவும் கேட்டுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளில் நிகழாத பலவற்றை குறிப்பிட்ட ஒரு பத்திரிகை விதாபனம் நிகழ்ந்ததாகப் பொய்ப் பிரசாரஞ்செய்து இந்நாட்டில் இன ஒற்றுமையைச் சிதைப்பதற்கு முயன்று வருகின்றது என்றும் இதுபற்றிப் பிரதமர் உடன் கவனமெடுக்கவேண்டுமென்றும் பண்டிதர் இரத்தினம் பிரதமரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தன்னுடன் வருமாறு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்ணன் பெண் முத்துலட்சுமி (வயது 27) மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு விசாரணை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் இ ஜி வீரபந்திரி முன்னிலையில் நேற்று காலை ஆரம்பமானது

இவ்வழக்கில் 69ம் ஆண்டு நவம்பர் 1ம் தேதி வவுனியாவைச் சேர்ந்த வேப்பங்குளத்தில் முனியாண்டி நடராசா என்பவர் நஞ்சு கொடுத்து முத்துலட்சுமியைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் நஞ்சுகுடித்து தற்கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது

எதிரிசார்பில் அட்வகேட் ஆர் ஈ தம்பிரத்தினம் புறக்டர் கே குணரத்தினம் புறக்டர் ஏ உலகநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர் எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் காங்கேயர் நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானர்.

முத்துலட்சுமி சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: நான் 63-ம் ஆண்டு திருமணம் செய்தேன் எனக்கு நான்கு பிள்ளைகள் உண்டு எனது கணவன் வேப்பங்குளத்தில் கமம் செய்கிருர். ராமு எனது கணவனின் இளைய சகோதரர் அவர் ஒருநாள் எதிரியை எங்கள் வீட்டிற்கு கூட்டி வந்தார் நடராஜாவுக்கு தங்க இடமில்லை என்றும் ஒருமாத காலம் எங்கள் வீட்டில் தங்கப் போவதாகவும் என்கணவரிடம் கேட்கப்போவதாகவும் ராமு கூறினார். அதன்பின் எதிரி நடராஜா எங்கள் வீட்டில் தங்கியிருந்தார். சாப்பாட்டை வெளியில் வைத்துக்கொண்டார்

### எதிரி இருந்தார்

சம்பவம் நடந்ததினம் காலை 8-30 மணிக்கு என் கணவர் வேலைக்குபோனர். எதிரி நடராசா வீட்டில் இருந்தார். அன்று எதிரி வேலைக்குப் போகவில்லை. எதிரி அன்று காலை 9 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ருர். மதியானம் அவர் வீட்டிற்கு திரும்பிவந்தார். அதன்பின் வவுனியாவுக்கு சென்ருர், கடையில் சாப்பாடு இல்லாத நேரத்தில் என்வீட்டில் சாப்பிடுவதுண்டு. அன்று என்வீட்டில் சாப்பிடவில்லை. அன்றுபின்னேரம் 5மணிக்கு வீட்டுக்குவந்தார்.

அவரின்கையில் ஒரு பார்சல் இருந்தது. கணவன் எங்கே என்று கேட்டார். வெளியில்போய்விட்டதாகச் சொன்னேன். மூன்று முறிப்புக்கு ஒரு விஷமாகப் போனேன் சரிவரவில்லை என்று எதிரி கூறினர், அதனல் மனம் குழப்பமடைந்திருப்பதாகவும் அவர் சொன்னர். எதிரிக்கு ஒரு கலியாணப்பேச்சு நடைபெற்றது அதுசரிவரவில்லை.

என்றதால் மனமுடைந்திருந்தார் அன்று காலை மணப்பெண் வீட்டிற்கு எதிரி போனர்.

எதிரி மதுபானமருந்தியிருந்தார். இனி உலகத்தில் வாழமுடியாது வாழவிருப்பமில்லை. நான் மருந்துகுடித்துச்சாகப்போகிறேன் என்று எதிரி கூறினர், வீட்டுக்குள் குழந்தை அழுதுகேட்டது. நான் உள்ளே போனேன் எதிரி அடுப்படிக்குள் சென்று ஒரு கோப்பையில் ... ஊற்றி குடிக்கப்போகிறேன் என்ரூர் கோப்பையை கையிலவைத்துக்கொண்டுபோத்தலில் உள்ள மருந்தை வாயில் ஊற்றினர். மருந்து குடிக்கவேண்டாம் என்று கூறியபடி ஓடிப்போய் தட்டிப்பறிக்கப்போனேன். அவர் போத்தலைகீழே போட்டுவிட்டு என்னைக்கழுத்தில் பிடித்து கோப்பையிலுள்ள மருந்தை என்வாயில் ஊற்ற முயன்ருர் அப்போதுமருந்து தட்டுப்பட்டு முகத்திலும், கழுத்திலும், தலையிலும் வடிந்தது. என்வாய்க்குள் மருந்துபோகவில்லை தள்ளுப்படும்போது என் முழங்கையில் காயம் ஏற்பட்டது. கீழேவிழுந்ததால் தலையிலும் காயம்ஏற்பட்டது நான் நின்று கொண்டிருந்தபோது தான் மருந்தை வாயில் ஊற்றப்பார்த்தார். விழுந்தபின் என்வாயில் ஊற்றப்பார்க்கவில்லை அதன்பின் எனக்கு அறிவில்லை. ஆஸ்பத்திரியில் தான் அறிவு வந்தது.

### ...ரும்படி கேட்டார்

எதிரி தன்னுடன் வரும்படி என்னைக்கேட்டார் சம்பவதினத்திற்கு 5, 6 நாட்களுக்கு முன் அப்படிக்கேட்டார் எதிரிக்கு கலியாணப் பேச்சு நடப்பதாகவும் அது முடியும்வரை எதிரி இருப்பாரென்றும் ராமு கூறினர். நான் இந்தியப் பிரஜை எதிரி தலைமன்னரைச்சேர்ந்தவராகும்.

நீதியரசர். எதிரி தன்னுடன் வரும்படி கேட்டதை கணவனிடம் கூறினீரா? ஆம்

நீதியரசர். அவர் என்ன செய்தார்?-அப்போது எதிரி வீட்டிலில்லை என்கணவர் ராமுவிடம் சென்று எதிரியை கூட்டிப்போகும்படி சொல்லப்போவதாக சொன்னர்.

முத்துலட்சுமி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்ததினம் மத்தியானம் ... எதிரி என்னை ... ... வரும்படி கேட்டதா ... ... சொன்னேன்...

# கூட்டுறவுப் பத்திரிகை வெளியீட்டகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஆபாசமற்றது. எமது பாரம்பரிய கலாசாரங்களையும் பண்புகளையும்எடுத்துக்காட்டும் இலக்கிய சாதனமாய் விளங்கவல்லதுமாகிய ஒரு சஞ்சிகையை கூட்டுறவு அடிப்படையிலேதொடங்குவது இன்றையதேவை. பொருத்தமான காலத்திலே ஏற்ற சூழ்நிலையிலே இம் முயற்சிதொடங்கப் படுவது வெற்றிக்கு நம்பிக்கை யூட்டுவதாகும்' என கூட்டுறவு பத்திரிகை வெளியீட்டக அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய வைத்தீஸ்வர வித்தியாலய முன்னுள் அதிபர் திரு ச அம்பிகைபாகன் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பல எழுத்தாளர்களும் பிரசுரகர்த்தர்களும் கல்விமான்களும் சமுகமளித்திருந்தனர்

தனிப்பட்டவர்களின் பத்திரிகை வெளியீட்டுமுயற்சிகள் தோல்வியடைந்தமைக் காணகாரணங்களைதிரு சி சரவணபவன் (சிற்பி) விளக்கிப் பேசினர். இந்துக்கல்லூரி ஆசிரியரும் பல விஞ்ஞான பாடநூல்களின் ஆசிரியருமாகிய திரு ம சி பிரானின் தமிழ்ச்சஞ்சிகை எவ்வாறு அமைந்தால் ஈழத்து வாசகர்களுக்குப் பயனுடையதாய் அமையும் என்றவிஷயத்தை விரித்துரைத்தார்,

வெளியீட்டக நிர்வாக குழுத்தலைவராக திரு ச அம்பிகைபாகன் ஏகமனதாகத்தெரிவுசெய்யப்பட்டார். சண்முகநாதன் அச்சக உரிமையாளர் திரு ச குமாரசாமி, ஸ்ரீ சுப்பிரமணிய அச்சக உரிமையாளர் திரு ஆ சுப்பிரமணியம், ஆனந்தா அச்சக அதிபர் திரு தி ச வரதராசன் (வரதர்) முன்னுள் மலேசிய சட்டசபை உறுப்பினர் திரு இ நாகரத்தினம் ஆகியோர் உபதலைவர்களாகவும் திருவாளர்கள் ம சி பிரான்சிஸ் க சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோர் இணைச் செயலாளராகவும், திரு இ வேலுப்பிள்ளை பொருளாளராகவும் தெரிவு செய்யப் பெற்றனர். இரகசிகமணி கனகசெந்திநாதன், திருவாளர்கள் இ மகாதேவா, [தேவன்- யாழ்ப்பாணம்] திரு சி கார்த்திகேசு [சேந்தன்] திரு செ யோகநாதன் திரு அ பஞ்சாட்சரம், திரு அ கருணைகரர், வித்துவான் க ந வேலன் ஆகியஎண்மர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரியப்பட்டது. கவிஞர் காரை செ சுந்தரம் பிள்ளை உபசெயலாளராகத் தெரியப்பட்டார். பத்திரிகையாசிரியராக திரு இ சரபணபவன் தேர்ந்தெடுக்கப்பட்டார். எழுத்தாளர் ஐவரைக்கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது'

நூறுருபாகொண்ட நூறு பங்குகளையாவது சேர்த்து அதை மூலதனமாகக் கொண்டு பத்திரிகையைத் தொடக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டதுடன் உபவிதிகளை அமைத்தற்கெனத் தலைவர், செயலாளர்கள் பத்திரிகாசிரியர், பொருளாளர் ஆகியோரைக்கொண்ட ஓர் உபகுழுவும் நியமிக்கப்பட்டது.

# முஜிபுர் கிளர்ச்சிக்கு யாஹ்யாகான பணிந்தார் ஒத்திவைக்கப்பட்ட தேசிய சபை 25-ல் கூடுகிறது

ராவல்பிண்டி, மார்ச் 6

கிழக்குப் பாகிஸ்தான் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆணைமீது கிழக்குப் பாகிஸ்தான் மக்கள்காட்டியஎதிர்ப்புக்கு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யா கான் பணிந்தார் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்ட பாகிஸ்தான் தேசிய சட்டசபைக்கூட்டத்தை இம்மாதம் 25-ம் திகதி கூட்டுவதாக இன்றுஅவர் அறிவித்தார்.

ஆனலும் தேசிய சட்டசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதை எதிர்த்து கிழக்குப் பாகிஸ்தானில் இன்றும் பொது வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றது.

கடுமையான செய்தித் தணிக்கை காரணமாககிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்கள் எதுவும் தெளிவாகக் கிடைப்பதாயில்லை. ஆனலும் ரயில் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டுள்ளதாகவும் டாக்காவுக்கும் இதர பகுதிகளுக்குமிடையில் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# 'தமிழ்க் கலாச்சாரத்தின் அத்திபாரம் புராணங்களே'

தாவடி, சனி

புராணங்கள் நமது பண்பாட்டின்கருவூலங்களாகும்.

புராணங்கள் இல்லையேல் தமிழ்க் கலாசாரம் ஆட்டம் கண்டிருக்கும். தமிழ் மக்களின் தெய்வமாகிய முருகப் பெருமானைப் பாட்டுடைத் தெய்வமாகக் கொண்ட கந்தபுராணம் நமக்கு கிடைத்த கற்பகதரு என சிவநெறிக் காவலர் முதலியார் செ முத்துத்தம்பி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற கந்தபுராண வார விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

சைவ சித்தாந்த விரிவுரையாளர் வித்துவான் க. கணபதிப்பிள்ளைபேசுகையில் தமிழர்களின் தவப்பெருந்திரு நூலாகிய சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களையுடையது என்றும் அதன் விளக்கமே தோத்திர நூலாகிய பன்னிரு திருமுறைகளாகுமென்றும் சிவஞானபோதம் ஆகிய சாத்திர நூலின் இலக்கியமாக விளங்குவது கந்தபுராணம் என்றும் கூறினர். அவர் மேலும் பேசியதாவது:

பன்னிரு திருமுறைகளையும் பதினுன்கு சாத்திர...

(8-ம் பக்கம் பார்க்க)

### நீதியரசர்

நீதியரசர்: முன்னர் 6 நாளுக்கு முன் கேட்டதாக சொன்னீர்? ஞாபகமில்லை ஒரு தரம்தான் கேட்டார், கணவன் 12 மணிக்குவந்த பின் அவரிடம் சொன்னேன், அப்போது எதிரிவீட்டில் இல்லை. கணவனுக்கு அதைக் கேட்டதும் ஆத்திரமாக இருந்தது. ராமுவிடம் சொல்லப்போவதாக சொன்னர்.

எதிரிசார்பில் ஆஜரான அட்வகேட் ஆர் ஈ தம்பிரத்தினம் முத்துலட்சுமியை குறுக்குவிசாரணை செய்தார்.

வழ? கணவனிடம் சொன்னபோது ஆத்திரமாக இருந்தாரா?-ஆம். வீட்டிலிருந்து கலைக்கவேண்டும் என்ரூர்.

வழ: கணவன் எங்காவது போவதாகக் கூறினரா? -இல்லை.

வழ: மத்தியானம் வரும்போது எதிரி சந்தோஷமாக இருந்தார்?- ஆம்.

விசாரணை இன்று காலை 9-30 மணிக்கு தொடர்ந்து நடைபெறும். (யோகி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்க்கு வேலைவாய்ப்பளிக்க காந்திசேவா சங்கம் திட்டம்!

— நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், சனி

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முன்வந்துள்ளது. அகில இலங்கை காந்தி சேவாசங்கம் வேலையில்லாது கஷ்டப்படும் இளைஞர்களுக்கு பயிற்சிஅளித்து வேலைவாய்ப்பளிக்கும் ஒரு திட்டத்தை இச்சங்கம் வகுத்துள்ளது.

காந்தி சேவா சங்கச் செயலாளர் திரு சி. க. வேலாயுதபிள்ளை இத்தகவலைத் தெரிவித்தார்.

அக்கராயன்குளக் காந்திக் கிராமத்தில் இளைஞர்களுக்கு ஒரு வருடப்பயிற்சி அளித்த பின்னர் அவர்களின் திறமைக்கேற்ப இந்தியா அனுப்பி, திருப்பூர், மைசூர், பம்பாய் போன்ற இடங்களிலுள்ள காந்திக் கிராமத்தில் பயிற்சிஅளிக்க ஏற்பாடுசெய்யப்படும்.

அங்குபயிற்சி பூர்த்தியானதும், காந்திசேவாசங்கத்தில் கடமையாற்ற இடம் அளிக்கப்படுவர்.

இரத்மலானை சர்வோதய முகாம் பயிற்சிக்கு 95 விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும், 41 பேரே நேர்முகப் பரீட்சைக்கு வந்ததாகவும் திரு வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிக்கன வாழ்க்கையையும் சிரமங்களையும் வாலிபர்கள் பொறுப்புணர்ச்சியுடன் ஏற்றுக் காந்திய இலட்சிய அடிப்படையில் பொறுமையுடன் 'சர்வோதய' பயிற்சி பெற வேண்டும். அப்படியானல் கிராமத்தில் தமது மூலப் பொருளைக்கொண்டு கைத்தொழில்களைச் செய்யலாம்.

உணவுக்கு இரண்டாவது உடுப்பு இதனை நாம் நெய்து அவற்றை சாயம்போடவும், பிளீச் ஆக்கவும் துணிகளின் செய்கை முறைகளைப் பழக வேண்டும்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் பரந்த திட்டத்தில் நெசவு, சிறுகைத் தொழில் போன்ற வேலைகளில் வாலிபர்களை ஈடுபடுத்தி வேலைவாய்ப்பளிக்கப் பல திட்டங்களை வகுத்துள்ளது.

உருத்திரபுரம், அக்கராயன்குளம் இரண்டிலும் பயிற்சிபெற்றுவரும் இளைஞர்கள் வேலை தொடங்கியதும் சிறப்பான வருவாய பெறவும், ஓர் காந்திய தத்துவ முறையை வளர்க்கவும் வாய்ப்பும் ஏற்படும்

## வடமராட்சி கிழக்கில் முந்திரிகைச் செய்கை

அம்பன், சனி

வல்லிபுரக் கோயிலிருந்து சுண்டிக்குளம் வரையிலுள்ள மணலில் கடினமான வெள்ளைக் கிளாஸ் உற்பத்தி செய்ய முடியாதென்றும் இம்மண்ணிலிருந்து கண்ணாடி வகை மாத்திரமே உற்பத்தி செய்யலாமென்றும் அதற்கும் உற்பத்திச்செலவு குறிப்பிட்ட தொகையை விட அதிகமாகச்செலவாகுமென்றும் இப்பகுதி மணலை ஆராய்ந்து சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இலங்கை மண் ஆராய்ச்சிக்கழகம் தெரிவித்துள்ளது.

குடத்தனைக்கிராம சபைப் பகுதி அபிவிருத்திச்சபைப் பொதுக்கூட்டம் வடமராட்சி வடக்குக்கிழக்குக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்றபோது பருத்தித்துறை எம். பி. பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார். இவ் அபிவிருத்திச் சபை சிறு கண்ணாடித் தொழிற்சாலையொன்றை அமைக்க எடுத்துள்ள முயற்சி வரவேற்கக்கூடியதாகும். ஆனல் இத்தொழிற்சாலைக்கு வேண்டிய இயந்திரம் வெளி நாட்டிலிருந்து வரவழைக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் இத்திட்டம் பயனற்றதாகவும் போகலாம் என்று திரு. துரைரத்தினம் பேசுகையில் கூறினர்.

திரு. துரைரத்தினம் மேலும் பேசியதாவது:-

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மரமுந்திரிகை பெருந்தொகையாகப் பயிரிடலாம். இப்பகுதி மரமுந்திரிகைச் செய்கைக்குசிறந்த இடமென அரசாங்கமே சிபார்சு செய்திருப்பதால் முந்திரிகை பயிரிடுவதில் கவனமெடுக்கவேண்டும்.

தலைவர் மு. தம்பிமுத்து பேசுகையில்; வடக்கை வளம்பெறச் செய்யவும். மங்காத ஒளிதரவும் யாழ்ப்பாணம் செல்லும் லக்ஷபான மின்சாரம் வழுக்கையாற்றங் கரையாகவே செல்கின்றது. அம்பனில் குடத்தனைக் கிராம சபைக்கும் லக்ஷபான மின்சாரக் கம்பத்துக்கும் இடைத்தூரம் 1 1/2 மைல்களே. லக்ஷபான மின்சாரத்தை இங்குபாய்ச்சினல் வடமராட்சி கிழக்கை வளம் பெறச்செய்வதுடன் பல தொழிற்சாலைகளையும் சுலபமாக அமைக்க ஏதுவாய் அமையுமெனத்தெரிவித்தார்.

தாழைவேந்தன், கே. சிவப்பிரகாசம் தி. சந்திரசேகரமும் மற்றும் பலரும் உரையாற்றினர்.

## உயர்சபை அமைக்கப்படும்

கோட்டை, சனி

தோட்டத் தொழில் அமைச்சு தெங்குப்பொருள் உற்பத்தி குறித்து ஆராயவும் உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேற்பார்வை இடவும் ஒரு உயர் சபையை அமைக்கவிருக்கிறது. தற்போதுள்ள தெங்குப் பொருள் உற்பத்திக்கான 4 சபைகளும் தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் புதிய திட்டத்தின்கீழ் செயற்படவுள்ளன.

மேலும் 4 புதிய சபைகள் நிறுவப்படவுள்ளதாக தோட்டத்தொழில் அமைச்சைச்சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## ஒரு கஞ்சாச்செடி: ரூ. 75 அபராதம்

சுழிபுரம், சனி

கஞ்சாச்செடியொன்றைத் தமது வளவில் வளர்த்த குற்றத்துக்கு ஒருவர் 75 ரூபா அபராதம் செலுத்தினர். சித்தன்கேணியைச் சேர்ந்த சிவல் தொழிலாளியே அந்தச் செடியை வளர்த்தவராவர். காத்தி என்ற பிரஸ்தாப தொழிலாளி தாம் கஞ்சாச்செடி வளர்த்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். சங்கானை வலோச்பகுதியினர் இவரது வளவில் கஞ்சாச் செடியைக் கண்டுபிடித்து இவர்மீது வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

## இன்றைய பலன்

மாசி மாதம் 23-ம் திகதி (7-3-71)

மேஷம்- உழைப்பினல் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. இன்று உற்சாக தினம்.

ரிஷபம்- உள்ளம் இன்பத்தால் துள்ளும். புத்திரர்களால் புதிய உற்சாகம் பிறக்கும் தனக்கென வாழப் பெரு வாழ்வு வாழ்வீர்.

மிதுனம்- மோதவரும் பகை, மோசடிகள் நடக்கும். சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படலாம். வாகனச் சொந்தக்காரர்களுக்கு இன்று பொன்னுள்.

கடகம்- இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம்பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப் படுத்துவார்கள்.

சிம்மம்- எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும் அவசர முடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம்

கன்னி- நினைத்ததில் தடை ஏற்படும். இதன் மூலம் அதிக செலவுக்கு இடமுண்டு. இனபந்துக்கள் மத்தியில் அபிப்பிராய பேதங்கள் தோன்றலாம்

துலாம்- வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டிபோடும். இன்று தித்திப்பானதினம்

விருட்சிகம்- சிந்தையில் தடுமாற்றம்ஏற்படும் செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். சுகாதாரம்வேண்டும்

தனுசு- இனிவான சம்பவங்கள் இடம்பெறும் அபிப்பிராயபேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர்.

மகரம்- முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள்.

கும்பம்- புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும்.

மீனம்- தொழில்முறையில் முன்னேற்றம் தென்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## அபிராமி அந்தாதி அரிய பொக்கிஷம்

உரும்பராய், சனி

அபிராமிப்பட்டர் அருளிச் செய்த அபிராமி அந்தாதி தெய்வத்தமிழ் பாக்களாலானது. நூற்றெரு பாடல்களைக் கொண்ட இந்நூல் நூற்றெரு தலைமுறை கழிந்தாலும் பழமையும் புதுமையும் பெருமையும் பயப்பதாகும். இறந்தவர்கள் பொருட்டுச் சரமகவி பாடும் காலம்போய் அவர்கள் ஞாபகமாகத் தெய்வத் திருவருட் பாடல்களைக் கொண்ட நூல்களை வெளியிடுவது மிகவும் வரவேற்கக் கூடியது" என அண்மையில் சிவபதமடைந்த ஊரெழு திரு. சி. சிவகுருவின் ஞாபகமாக "அபிராமி அந்தாதி மலரை வெளியிட்டுப் பேசிய ஆசிரியர் திரு. ச. கதிரவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஊரெழு பிரபல வர்த்தகர் திரு. மு. இராசரத்தினம் இந்நூலை இலவசமாக வெளியிட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் மருந்து பெற

## காலை தொடக்கம் மாலை 3 மணி வரை கியூ

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தில் மருந்து பெறவரும் நோயாளிகள் டாக்டரிடம் சென்று மருந்து எழுதிய பின்னர் மருந்துச்சாலையில் மருந்து பெறுவதற்கு நீண்ட கியூவரிசையில் நிற்கவேண்டி ஏற்படுகிறது

காலை 8 மணிக்கு மருந்துச்சாலை கியூவில் நிற்பவர்கள் மாலை 3 மணிவரை கியூவில் நின்றும் மருந்துபெறமுடியாமலும் வீடுதிரும்ப வேண்டிய சூழ்நிலை இங்கு அடிக்கடி ஏற்படுவதாக பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆஸ்பத்திரிக்குச்சென்ற ஒருநோயாளி டாக்டரிடம் கியூவில்சென்று திரும்புவதற்கு அதிகநேரம் பிடிக்கவில்லை என்றும், ஆனல் மருந்துச் சாலையில் பலமணி நேரம் கியூவில் நின்றும் மருந்து பெறமுடியாமல் வீடு திரும்பியதாகவும் கூறினர்.

கடந்த சில தினங்களாக வெளிநோயாளர் சிகிச்சை நிலைய மருந்துச்சாலையைச் சுற்றி நோயாளர் நீண்ட கியூவரிசையில் பல மணி நேரம் நிற்கக் காணப்பட்டனர். கியூவின் ஆரம்பமும் முடிவும் ஒரே இடத்தில் சந்திக்கும் நிலையும் ஏற்பட்டது ஊழியர்கள் பலர் வேறு ஆஸ்பத்திரிகளுக்கு தற்காலிகமாகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டதினல் இங்கு இவ்வித கஷ்டம் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

## சிங்களத்தில் சட்டஇயல் சொற்றெகுதி

கோட்டை, சனி

அரசகரும மொழித் திணைக்களம் சிங்களச்சட்ட இயல் சொற்தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளது. அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நீதி மன்றங்களில் நடைமுறைப் படுத்துவதற்கு இச் சொற்றெகுதி துணைபுரியுமாம்.

மேலும் சகல சட்ட ஆவணங்கள், நீதி நிர்வாகச் சட்டம் போன்றவற்றையும் மிக விரைவில் சிங்களத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசகரும மொழித்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதனல் கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் சிங்கள மொழியில் வேலை செய்வது இலகுவாய் இருக்குமெனக் கருதப்படுகிறது.

## மக்கள் கமிட்டி திணைக்கள காரியாலயம்

கோட்டை, சனி

மக்கள்கமிட்டி திணைக்களம் கொழும்பு விஜேராம மாவத்தை 117-ம் இலக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராகப் பதவியேற்றுள்ள திருகோணமலை அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு லயனல் பெர்னுண்டோ தலைமையில் நேற்று முன்தினம் பிரித் ஓதும் வைபவத்துடன் மக்கள் கமிட்டி திணைக்கள வேலைகள் ஆரம்பமாகின.

பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகாவின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மக்கள் கமிட்டி திணைக்களத்தில் அடுத்தமாத இறுதிக்குள் 9000 மக்கள் கமிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டுவிடும் என்று இத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊரெழுப் பிள்ளையார் கோவிலில் வெளியீட்டுவிழா நடைபெற்றது.

## பருத்திநூல் இறக்குமதிக்கு தடை

கோட்டை, சனி

பருத்திநூல் இறக்குமதியை தடைசெய்வதற்கான நடவடிக்கையைவிரைவில் மேற்கொள்ளக் கைத்தொழில் விஞ்ஞாபன விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பருத்திநூலுக்குப் பதிலாகப் பருத்திப்பஞ்சை இறக்குமதி செய்து நூல் நூற்கும் நெசவாலைகளுக்கு விநியோகிப்பதெனவும் அமைச்சுதீர்மானித்துள்ளது.

உள்ளூரில் உற்பத்திசெய்யும் நூல் இறக்குமதி செய்யப்படும் நூலிலும்பார்க்கத் தரம் வாய்ந்ததாக உள்ளது என ஜவுளிகூட்டுஸ்தாபனம் அமைச்சருக்கு அடிக்கடி தெரிவித்ததைத் தொடர்ந்தே கைத்தொழில் அமைச்சு மேற்படி நடவடிக்கையை எடுக்க முடிவு செய்துள்ளது. அமைச்சின் இத்திட்டத்தால் தரமான நூல் உள்ளூரில் உற்பத்தியாவதோடு அநேகம் பேருக்குச்வேலை வாய்ப்பும்கிடைக்கும்என எதிர்பார்க்கப்படுகிறது.

## 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் பதியக்கூடாது

கோட்டை, சனி

50 வயதுக்கு மேற்பட்டவர்களையும் தற்காலிக வசிப்பிட பர்மிட்காரர்களையும் வேலைவாய்ப்பு பதிவு நிலையங்களில் பதிவுசெய்யக்கூடாது என வேலைவாய்ப்பு பதிவு நிலையங்களுக்கு தொழில் அமைச்சு அறிவித்துள்ளது

இந்நடவடிக்கையைச் சட்டமாக்கத்தொழில்அமைச்சர் திரு மைக்கல் சிறிவர்த்தன ஆட்சிமன்றத்தில் மசோதாவொன்றை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளார்.

மேற்படி நிலையங்களில் இனிமேல் 16 வயதுக்கும் 50 வயதுக்கும் உட்பட்ட இந்நாட்டுப் பிரஜைகள் மாத்திரமே பதிவு செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு பதிவு நிலையங்களையும் தொழில் அமைச்சு மாற்றியமைக்கவுள்ளது.

## தளபாட வசதிகள்

கோட்டை, சனி

இவ்வருடம் ஜூன்மாதத்தில் கல்வியமைச்சு 100 பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூடங்களையும் வகுப்பறைகளுக்குத் தேவையான தளவாடங்களையும் அளித்து விஞ்ஞானக் கல்விவளர்ச்சிக்கு உதவவிருக்கிறது.

ஆசிய பிரதேச பாடசாலை கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினல் மேற்படி தளபாடங்களின் அமைப்பு நிர்வயிக்கப்பட்டுள்ளது. தளபாடங்கள் வழங்க வேண்டிய பாடசாலைகள் அமைச்சினல் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இப்புதிய தளவாடங்கள் மாணவர்களுக்கு வசதியாகவும் அதே வேளையில் நீண்டகாலம் பாவிக்கக் கூடியனவாகவும் உள்ளதாகக்கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி. மேற்கு முதல் பிரிவு

## பாட்மின்டன் நொக்கவுட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வலிகாமம் மேற்குப் பிரிவில் நடைபெற்ற கல்லூரிகளின் இறுதிப் போட்டிகளில் வெற்றியீட்டிய கல்லூரிகள் பின்வருமாறு:

ஆண்கள் மேற்பிரிவில் வெற்றிக் கிண்ணத்தை மானிப்பாய் இந்துக்கல்லூரியும் ஆண்கள் மேற்பிரிவில் இரண்டாமிடத்தை மானிப்பாய் மெம்மோறியலும் சுவீகரித்துக் கொண்டன.

பெண்கள் மேற்பிரிவில் மானிப்பாய்மகளிர் கல்லூரி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது பெண்கள் மேற்பிரிவில் பண்டத்தரிப்பு சென் யோசேப் வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

### பாட்மின்டன்

(ஓப்பின்)

தனியாட்டம்: மானிப்பாய் றெட்ரேஞ்சஸ் கழகத்தைச் சேர்ந்த வி. ஜெயபாலன் வலிகாமம் மேற்குக் காரியாதிகாரிப் பிரிவில்சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டார். றன்னரப்பாக மானிப்பாய் றெட் ரேஞ்சஸ் கழகத்தைச் சேர்ந்த து. குணராசசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

இருவராட்டம்: மானிப்பாய் றெட்ரேஞ்சஸ் கழகத்தைச் சேர்ந்த வி. ஜெயபாலனும் து. குணராசசிங்கமும் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். றன்னரப்பாக செல்வன் த. ஸ்கந்த சண்முகராசாவும், ம. வரதராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நவாலி மணிமண்டபத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வெற்றி பெற்றோருக்கு முதலியார் மகேசன் பரிசில்களை வழங்கினுர். வலிகாமம் மேற்கு விளையாட்டுப் பிரிவு இயக்குனர் திரு ரி. நடராசா போட்டியேற்பாடுகளைக் கவனித்தார்.

## உடுப்பிட்டிப் பாடசாலைகள் மெய்வல்லுநர்போட்டிமுடிவு

பருத்தித்துறை, சனி

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில்நடந்தபோது விளையாட்டு உடற்பயிற்சி அதிகாரி திருமதி கே குகதாசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். முடிவுகள் வருமாறு;

19 வயதுக்குட்பட்ட சிறுவர்:- உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, கரணவாய் ம. வி.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்.- உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி, கரணவாய் ம. வி.

13 வயதுக்குட்பட்ட சிறுவர்:- கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, கரணவாய் ம. வி. புட்டளை ம. வி.

19 வயதுக்குட்பட்டசிறுமியர்:- உடுப்பிட்டி மகளிர் பருத்தித்துறை வட இந்து மகளிர்.

16 வயதுக்குட்பட்ட சிறுமியர்:- உடுப்பிட்டி மகளிர், வடஇந்து மகளிர்.

13 வயதுக்குட்பட்ட சிறுமியர்:- உடுப்பிட்டி மகளிர் வட இந்து மகளிர். 'பி' பிரிவு 16 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியருக்கான பரிசில்களை வதிரி றே. க. பாடசாலை பெற்றது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி எஸ். மான் பரிசில்களை வழங்கினுர்.

### ம. வித்தியாலயம் முதலிடம்

புங்குடுதீவு, சனி

புங்குடுதீவு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கனிஷ்டபிரிவு விளையாட்டுப் போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் முதலிடம் பெற்றது. மேற்படி மகாவித்தியாலயத்தில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:-

75 மீற்-100 மீற்றர்: செல்விகள் இ ஞானேஸ்வரி, க வனஜா. உயரம்பாய்தல் ஆண்கள்: நா விக்னேஸ்வரன், நா சோமசுந்தரம், நீளம்பாய்தல் ஆண்கள்: 2ம் இடம் நா நாகேஸ்வரம் 4x100, 4x150 மீற்றர் அஞ்சல் ஓட்டங்களிலும் மகாவித்தியாலயம் முதலிடம் பெற்றது.

......

### மெய்வல்லுனர் போட்டி

மாங்குளம், திங்கள்

இன்று மாங்குளம் உப வட்டார மெய்வல்லுனர் போட்டி மாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறுகிறது வட்டாரக் கல்வியதிகாரி திரு. டபிள்யு. ஆர். விருசையா தலைமையில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

......

### சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் வெற்றி பெற்றது.

சென். ஜோன்ஸ் முதல் இன்னிங்ஸில் 87ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 156 ஓட்டங்களையும் பெற்றது. சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் 45 ஓட்டங்களையும் 2-வது இன்னிங்ஸில் 89 ஓட்டங்களையும் பெற்றது ஆட்ட முடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 118 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(தே. நி)

மத்தியகல்லூரி

### இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மத்திய கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்தியகல்லூரி இன்னிங்ஸால் வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 173ஓட்டங்களைப் பெற்றது. ஹாட்லிக் கல்லூரி முதல் இன்னிங்ஸில்63ஓட்டங்களையும் 2வது இன்னிங்ஸில் 109 ஓட்டங்களையும் பெற்றது.

இப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

(தே. நி.)

## வடமராட்சி உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, சனி

நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக்கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் கீழ் வரும்பாடசாலைகள் வெற்றியீட்டின.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்: புலோலி இந்துக் கல்லூரி, வல்வை சிதம்பராக் கல்லூரி, உடுத்துறை மகா வித்தியாலயம்

13 வயதுக்குட்பட்ட சிறுவர்: வதிரி ஸ்ரீலங்கா மகா வித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம்.

16 வயதுக்குட்பட்ட சிறுமியர்: வல்வை சிதம்பரா, பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

13 வயதுக்குட்பட்ட சிறுமியர்; பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர், பருத்தித்துறை றோ. க.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிமைதானத்தில் நடந்த இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பருத்தித்துறை கல்வி வட்டார அதிகாரி திரு. க. நவரத்தினம் வழங்கினுர்.

......

யாழ். உதைபந்தாட்ட

### சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். விளையாட்டரங்கில் விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டிகளின்முடிவுகள் சில வருமாறு:

#### யுத்கவுன்சில் வெற்றி

குருநகர் "யுத்கவுன்சில்" விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பளை 'கிறுஸ்கோப்பஸ்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், யுத்கவுன்சில் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்

#### டைய்மன்ஸ் வெற்றி

வதிரி 'டைய்மன்ஸ்' விளையாட்டுக் கழகத்திற்கும் குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் டைய்மன்ஸ் கழகம் 2—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. வி. ரி. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

#### பொம்பஸ் வெற்றி

வதிரி 'பொம்பஸ்' விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பொம்பஸ் கழகம் 5—0 கோல்களால் வெற்றி பெற்றது

இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

#### பொலிஸ்வெற்றி

யாழ். பொலிஸ் கோஷ்டிக்கும், ஜொலிஸ்ராஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பொலிஸ் கோஷ்டி 5—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ராஜந்திரா மத்தியஸ்தம் வகித்தார். (தே. நி)

......

### பெ. ஆ. சங்கம்

கோப்பாய், சனி

கோப்பாய் மகாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் இம்மாத 13-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 2 மணிக்கு திரு. ஏ. காசிநாதர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## புதிய உத்தியோகஸ்தர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மத்திய கல்லூரித் தமிழ்மன்ற கூட்டம் திரு சண்முககுமரேசன் தலைமையில் நடைபெற்றபோது இவ்வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் இரா பாலகிருஷ்ணன், செயலாளர் சி. மகேந்திரராஜா, உபதலைவர் வ. திருச்செல்வம் உதவிச் செயலாளர் பொ: நடராஜா, பொருளாளர் க. ஜெயகாந்தன், பத்திரிகை ஆசிரியர் ச வாசுதேவன்.

0 0 0

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறைத்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்தியகுழுவின் நிர்வாகிகளாக பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் திரு வே. நாகநாதன், உப தலைவர்கள்: ஆ திருநாவுக்கரசு, என் இராசையா. செயலாளர் வே. தி: அரசு, உபசெயலாளர்கள். க வல்லிபுரம். செ. சங்கரப்பிள்ளை, பொருளாளர் ஆர் அருளானந்தம், ஏனைய நிர்வாகசபை அங்கத்தவர்கள் ச தர்மகுலசிங்கம், இ. நாகலிங்கம், ரி. செபமாலை, ம சின்னத்தம்பி.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

அ. இ. சி. தமிழர் மகாசபையின் யாழ் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம், மகாசபைக் காரியாலய மண்டபத்தில் உபதலைவர் திரு. எம். செல்லையா தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர் திரு. டி. ஜேம்ஸ், உபதலைவர் திரு. டொமினிக் ஜீவா, செயலாளர் திரு. எஸ். சிற்றம்பலம, தனாதிகாரி திரு. கே. தவம்.

வட்டார ரீதியாக 21 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

......

### அரசாங்கம் தயார்

கொழும்பு, சனி

அரசாங்கத்தைக் கவிழ்க்க எடுக்கப்படும் எந்த நடவடிக்கையையும் முறியடிப்பதற்கு அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது என்று தகவல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி சேரமசர தகநாயக்கா இன்று தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய திரு. தகநாயக்கா இதுபற்றி பொலிஸ் பகுதி மிகவும் விழிப்புடன் இருப்பதாகவும் அப்படி ஏதாவது நடந்து விடுமோ என்று மக்கள் பயப்படுவதற்கு எவ்விதகாரணமும் இல்லை என்றும் கூறினர். (சி. ஏ.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 7—3—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அலை 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 இசைவேளை, 8-15 இன்னிசைகீதங்கள்.

844 மீ. அலை 49 மீ.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்ப இசை

844 மீ. அலை 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு. 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 வயலின், 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 கண்ணகி காவியம், 7-00 பிறநாட்டு தேசிய கீதங்கள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 லயவின்யாசம், 10-30 செய்தித் தொகுப்பு.

### நகையும் சிறுவனும் பொலிசில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஒரு வீட்டில் வேலைக்கு நின்ற சிறுவன் ஒருவன் வீட்டிலிருந்து தங்க நகைகளுடன் தப்பியோட முயன்றபோது யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பிரயாணி ஒருவரிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

பிரஸ்தாப சிறுவன் சாப்பிடுவதற்கு கையில் பணமில்லை என்று ரயில் நிலயத்தில் நின்றவர்களிடம் பிச்சை எடுத்துக் கொண்டு நின்றதாகவும் இவரில் சந்தேகம்கொண்ட ஒரு பிரயாணி இவரது கையிலிருந்த பெட்டியைத் திறந்து பார்த்ததாகவும் அப்போது அதற்குள் விலையுயர்ந்த தங்கநகைகள் காணப்பட்டதாகவும் சிறுவனை உடனடியாகவே அந்நபர் பொலிசில் ஒப்படைத்ததாகவும் தெரியவருகிறது

இதுசம்பந்தமாக சிறுவன் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளான்


......

### கருத்தரங்கம்

சுழிபுரம், ஞாயிறு

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் ஆதரவில் நடைபெறும் கருத்தரங்கில் இன்று மாலை இன்றைய அரசியல் நிலையில் தமிழ் இளைஞரின் கடமை என்னும் பொருள்பற்றிவழக்குரைஞர் திரு மு. ஆலாலசுந்தரம் கருத்துரைவழங்குவார், கழக முன்றலில் இது இடம்பெறும்.

SONY®
2R-29



ஸோனி பாக்கெட் ட்ரான்சிஸ்டர் ரேடியோ

சீடில்ஸ் சினிரேடியோ

9, 10, கொன்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.

தொலைபேசி 27311

கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மன் அமைச்சர் விஜயம்

கோட்டை, சனி

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் திரு ஒட்டோவின்சரும் அவரது மனைவியும் நேற்று முன்தினமிரவு இலங்கைவந்துள்ளனர்.

இவர்களை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமனும், கைத்தொழில் அமைச்சர் திருரிபி சுபசிங்காவும் சந்தித்துவரவேற்றனர்.

# தமிழ்மொழி விசேஷ சட்டவிதிகள்

# முன்னைய அரசையே பின்பற்றுகிறது

## டட்லிக்கு பீலிக்ஸ் பதில்

கொழும்பு, சனி

தமிழ் மொழி விஷேட சட்ட விதிகளை ஐ. தே. கட்சியும் சமஷ்டிக்கட்சியும் கூட்டாக இருந்த அரசாங்கத்தின் காலத்தில் எவ்வாறு செயற்படுத்தினார்களோ அதே வகையில் தான் எமது அரசாங்கமும் பின்பற்றி வருகிறதென்று இன்று ஆட்சிமன்றத்தில் பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ்பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தமிழ் மொழி விஷேட விதிகளை ஆட்சேபித்து ஊர்வலம்நடத்தியபொழுது இறந்த தம்பராவே இரத்தினசாரதேரோவின் ஞாபகஸ்தூபிதிறப்பு விழாவில் அரசாங்கம் உத்தியோக ரீதியாக கலந்து கொண்டதை குறிப்பிட்டு அரசாங்கக் கொள்கை பற்றி திரு. டட்லி சேனநாயக்கா கேட்ட கேள்வி ஒன்றிற்கே மேற்கண்டபதிலை பீலிக்ஸ் தெரிவித்தார்.

இவ்விதம் பீலிக்ஸ் பதில் அளித்ததும் ஏன் அந்த விதிகளை ரத்துச் செய்யக்கூடாதென்று டட்லிசேனநாயக்கா வினாவொன்றை எழுப்பினர் அதற்கு திரு பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா இப்பொழுது அதற்கு அவசியம் ஏற்படவில்லை என்றும் அந்தவிதிகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாதென்றும் பதிலளித்தார்.

(சி. பி. ஏ.)



திருநெல்வேலி கலைக்கோவில் நாட்டிய நிறுவன கௌரவ இயக்குனரும், கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கல்லூரி நாட்டிய விரிவுரையாளருமான கலைஞர் வேல். ஆனந்தன் பஸ்மாசுரன் வடிவில் ரௌத்திர பாவம் ததும்ப இப்படிக்காட்சி தருகிறார். இவரது கோஷ்டியினரின் நாட்டியாஞ்சலி நாளை மாலை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

# நாடு இருக்கும் அழகில் நாங்களும் சேர்வதா?

## பீலிக்ஸிடம் டட்லி கேள்வி

கோட்டை, சனி

சமீபகாலத்தில் அனுவிக்காத இக்கட்டான நிலையை நாடு தற்போது அடைந்துள்ளது. கடந்த 9மாதங்களாக ஐக்கியமுன்னணி அரசாங்கம் மேற்கொண்ட கொள்கைகளால் நாட்டின் நிதிநிலையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவைகள்தான் சோஷலிச கொள்கையா? இந்த நிலையில் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டும் என்று விரும்புறீர்களா? என்று முன்னாள் பிரதமர் திரு டட்லிசேனநாயக்கா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் பொது நிர்வாக உள்ளூராட்சிமன்ற, உள்நாட்டு அமைச்சர் திரு பீலிக்ஸ்டயஸ்பண்டாரநாயக்காவிடம் கேட்டுள்ளார். திரு பண்டாரநாயக்கா பத்திரிகையாளர் மகாநாடொன்றில் வெளியிட்ட அறிக்கையொன்றுக்குப் பதிலளிக்குமுகமாக திரு டட்லி சேனநாயக்கா இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

திரு டட்லி சேனநாயக்கா மேலும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

அரசாங்க சார்பு ஆட்சி மன்ற அங்கத்தவர்கள் நாட்டின் நிலைமை சீர்கெட்டிருப்பது குறித்து மக்களது கருத்தை பலதடவை வெளியிட்டுள்ளார்கள். உங்கள் அரசாங்க எம்.பிக்கள் தாங்கள் தங்களது தொகுதிகளுக்குச் செல்லவியலாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகப் புகார் தெரிவித்துள்ளனர். இதனால்தான் நீங்கள் மக்களை மேலும்ஏமாற்ற ஐ தே கட்சியின் ஆதரவையும் நாடுகிறீர்களா?

## யாருடைய பணம்?

யாழ்ப்பாணம் கந்தர் மடம் பழம்றோட்டில் வசிக்கும் திரு. மு. வைத்திலிங்கம் என்பவர் யாழ்ப்பாணம் ஜிம்மா மொஸ்கிலேனுக்கு அண்மையில் பத்து ரூபாய்க்கும் நூறு ரூபாய்க்குமிடையிலான ரொக்கப்பணத்தைக் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் காரியாலயநேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## ஆலயம்பற்றி புகார்

மாவிட்டபுரம், சனி

நிர்வாகத் தவறினால் பலாலி தேவாலயம் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் ஆலயத்தின் நிர்வாகம் சரியான முறையில் இயங்காதலால் ஆலய பூசைகள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்நிலைமை உடனே தீர்க்கப்படவேண்டும் என்றும் இதை தீர்க்காவிட்டால் பெரிதும் தேவாலயம் பாதிக்கப்படும் என மக்கள் யாழ். மேற்றிராணியார் எமிலியானுஸ் பிள்ளைக்கு புகார்செய்துள்ளனர்.

## தமிழ்க்...

(5ம் பக்கதொடர்ச்சி)

களையும் கதை வாயிலாகச் சொல்லும் பெருங் காப்பிய நூல் கந்தபுராணம், சைவ சித்தாந்தத்தைக் கதைவாயிலாகக் காட்டியதோடுஅமையாமல் சிவராத்திரி, சூரசங்காரம், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை முதலிய அரும் பெரும் பண்டிகைகளை விளக்கி வாழ்வுக்கு ஒளியூட்டும் கலாசார நூலாகவும் கந்தபுராணம்திகழ்கின்றது.

இந்நாடு உய்யவந்த நாவலர் பெருமான் எத்துணைக் காலம் திருப்பிப் படிக்கினும் கேட்கினும் தித்தித்து அமுதூறும் அத்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழ் ஆகிய கந்தபுராணம் என்றார். இதை நாம் போற்றுதல் வேண்டும்.

இவ் விழாவில் புராணபடனமும் இடம்பெற்றது.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" [illegible] யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்திலுள்ள [illegible] 7-ந் [illegible] வெளியிடப்பட்டது.

காலி யாழ்ப்பாணம்

## கைத்தொழில் பேட்டை அமைப்பு கைவிடப்படுமா?

யாழ்ப்பாணம், ஞாயிறு

அச்சுவேலி, காலி ஆகிய இடங்களில் நிறுவப்படவிருந்த கைத்தொழில் பேட்டைகளை மூடுவதற்கு அல்லது சிறிய அளவில் ஆரம்பிப்பதற்கு கைத்தொழில் அபிவிருத்திசபை ஆலோசனை செய்து வருவதாக தெரியவருகிறது. கண்டியில் பல்லக்கலையில் சுமார் 70 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டையில் ஆலைகள் நிறுவ மிகவும் குறைவானவர்களே விண்ணபித்திருப்பதுதான் இதற்கு காரணமென்று கூறப்படுகிறது.

அச்சுவேலியில் நிறுவப்படவிருக்கும் கைத்தொழில் பேட்டையில் இதற்கான காணி ஒதுக்கப்பட்டு சிலகட்டிடங்களும் அமைக்கப்பட்டுவிட்டன. இங்கு ஆரம்ப திட்டத்தின்படி 35 ஆலைகள் நிறுவ முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஐக்கியமுன்னணி அரசாங்கம் நிறுவப்பட்ட பின்னர் கைத்தொழில் பேட்டை வேலைகளில் தாமதம் ஏற்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திசபை அச்சுவேலியில் 10 ஆலைகளுடன் கைத்தொழில்பேட்டையை ஆரம்பிப்பது அல்லது மூடிவிடுவது என்பது பற்றி ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது.

## கொழும்பில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரி பீற்றர் ஜே பீட்டர்சன் அரசாங்கத்திடம் இது பற்றி கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார். திரு. பீட்டர்சனை இலங்கை வெளியுறவு அமைச்சகம் அழைத்துள்ளது. (சீ. பி. ஏ)

## 'இளைஞர் ஒற்றுமைக்கு ஒரு சின்னம்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'இளைஞர்களின் ஒற்றுமையின் சின்னமாக மிளிருகின்ற வாசிகசாலைகளில் இளைஞர் தம் அறிவுபெருக அறிஞர்களின் நூல்களும் சகல பத்திரிகைகளும் இடம்பெறுதல் அவசியம்' இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. கமலநாதன் சைதடி மேற்கு சரஸ்வதி சனசமூகநிலைய திறப்பு விழாவில் கூறினார்.

## சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 19 O 0839 | 27 R 0316 |
| 35 G 0419 | 38 J 0697 |
| 16 R 0665 | 05 X 0113 |
| 17 N 0205 | 16 S 0263 |
| 07 G 0110 | 34 S 0117 |
| 03 C 0153 | 14 M 0107 |
| 07 C 0824 | 27 X 0639 |
| 28 M 0324 | 13 L 0575 |
| 22 Y 0523 | 02 R 0668 |
| 38 X 0503 | 08 A 0540 |
| 12 Q 0123 | 30 C 0762 |
| 19 M 0179 | 36 J 0506 |
| 07 B 0414 | 18 W 0576 |
| 35 Q 0817 | 26 Y 0512 |
| 37 T 0641 | 18 E 0508 |
| 17 R 0252 | 06 L 0851 |
| 20 P 0391 | 19 E 0658 |
| 01 R 0929 | 06 V 0011 |
| 37 X 0410 | 39 S 0518 |
| 33 J 0134 | 33 W 0924 |
| 10 X 0884 | 31 T 0940 |
| 11 D 0336 | 24 L 0148 |
| 12 A 0126 | 10 E 0223 |
| 20 P 0273 | 08 X 0871 |
| 14 J 0275 | 14 E 0908 |
| 28 J 0033 | 12 P 0153 |
| 37 O 0179 | 29 R 0498 |

(இவை யாவும் உறுதி செய்யப்படவேண்டியவை

## மரண அறிவித்தல்

இராமலிங்கம் - வேலுப்பிள்ளை

நவாலியூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் (பிறவுண் அன் கொம்பனி, நாவலப்பிட்டி) இராமலிங்கம் வேலுப்பிள்ளை காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசுவின் (பிறவுண் அன் கம்பனி, கொழும்பு) அருமைத் தந்தையாரும், பாலசிங்கத்தின் (இ. போ. ச. விசாரணை அதிகாரி, யாழ்ப்பாணம்) சிறிய தந்தையாரும், காங்கேசன்துறை குமாரகோவிலடியைச் சேர்ந்த சரோஜினிதேவியின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 'துவாரகை', 267/3, நாவலர்வீதி, ஆனைப்பந்தியிலிருந்து வில்லூன்றி மயானத்திற்கு 7-3-71 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பிற்பகல் 3-30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும் நண்பர்களும், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். 3202

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org